
# சைவநெறி

# 5



# சைவநெறி

## தரம்

## 5

## பாடநூல்

தேசிய கல்வி நிறுவகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

| | |
|---|---|
| முதலாம் பதிப்பு | - 2001 |
| இரண்டாம் பதிப்பு | - 2002 |
| மூன்றாம் பதிப்பு | - 2003 |
| நான்காம் பதிப்பு | - 2004 |
| ஐந்தாம் பதிப்பு | - 2005 |
| ஆறாம் பதிப்பு | - 2006 |
| ஏழாம் பதிப்பு | - 2007 |
| எட்டாம் பதிப்பு | - 2008 |
| ஒன்பதாம் பதிப்பு | - 2009 |

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

**அன்புக் குழந்தைகளே,**

இந்நூலை நன்கு கற்று
நல்லறிவு, நற்குணம் மேம்படுத்தி
அடுத்த ஆண்டில்
உங்கள் வகுப்புக்கு வரும்
தம்பி, தங்கைகளுக்கு ஒப்படைத்தல்
உங்கள் கடமையாகும்.

உங்களுக்குக் கிடைத்திருக்கும் இப்பாடநூலுக்காக
அரசினால் ரூபா 87.00 செலவிடப்பட்டுள்ளது.

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

2010/T/05/058/44,000

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழு மில்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
**கவிதையின் பெயர்ப்பு**

# முகவுரை

நல்லறிவும் நற்குணங்களும் நிறைந்த சிறந்த குடிமக்களை நாட்டில் உருவாக்கும் நோக்கினை நிறைவேற்றுதற் பொருட்டு மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இப்பாடநூல், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினூடாக உங்களுக்கு வழங்கப்படும் நன்கொடையாகும்.

இந்நூலிலிருந்து உச்சப் பயனைப் பெறுவதுடன் இதனை உரிய முறையில் கவனமாகவும் தூய்மையாகவும் பயன்படுத்தி, அடுத்த ஆண்டு உங்கள் வகுப்பிற்குச் சித்திபெற்று வரும் சகோதர, சகோதரிகளுக்கு வழங்குவதற்கு ஏற்ற விதமாகச் செயற்படுதல் உங்கள் கடமையாகும்.

எமது நாட்டின் 45 இலட்சம் அளவிலான மாணவர்களுக்குத் தேவையான அனைத்துப் பாடநூல்களும் அரசினால் இலவசமாக வழங்கப்படுவதனால் அவற்றை மீண்டும் பயன்படுத்தத்தக்க விதத்தில் கையாள்வது தேசிய சொத்தை பாதுகாப்பதில் நீங்கள் வழங்கக்கூடிய பங்களிப்பாகும் என்பதை நினைவூட்ட விரும்புகின்றேன். இதுபோலவே, இந்நூலின்மீது அக்கறையும் மரியாதையும் செலுத்துதல் நல்ல கல்வி பெறுவதற்கு உங்களுக்குக் கிட்டும் நல்லாசிகளாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இந்நூலை வெளியிடுவதற்குப் பங்களிப்புச் செய்த எழுத்தாளர்கள், பதிப்பாசிரியர்கள், நூல் மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள், திணைக்கள அலுவலர்கள் அடங்கிய செயற்குழுவினர் மற்றும் பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எனது நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டபிள்யு. எம். என். ஜே. புஸ்பகுமார
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
'இசுருபாய',
பத்தரமுல்ல.
2009.05.22.

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

புதிய கல்விச் சீர்திருத்த மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் அறிமுகப் படுத்தப்படுகின்ற 5 ஆம் தர மாணவர்களுக்கான சைவநெறிப் பாடநூலை விசேடமாக முன்வைக்கின்றோம்.

சமயம் தொடர்பான தேர்ச்சிகள் பலவற்றை மாணவரிடத்தே ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு, 5 ஆம் தரத்திற்கான சைவநெறி பாடத்திற்கேற்ற பாடநூலும், பாடங்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. பாடநூலை வாசிப்பது மட்டும், சைவநெறி பாடம் கற்பித்தலாக அமையாது. சமயம் தொடர்பான மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்ளல் சமய அனுஷ்டானங்களில் ஈடுபடுதல், சமயம் கற்றல், தமது அன்றாட வாழ்வில் இயன்றளவு கடைப்பிடித்தல் என்பவற்றைச் சிறுவயதிலிருந்தே சைவநெறி எதிர்பார்க்கின்றது.

தேசிய கல்வி ஆணைக்குழுவினரால் 1992 ஆம் ஆண்டு விதந்துரைக்கப்பட்ட பொதுத்தேர்ச்சிகளுள் ஒழுகலாறு, சமயம் தொடர்பான தேர்ச்சிக்கும் முக்கியத்துவமளிக்கப்பட்டுள்ளது. ஒழுகலாறு, சமயம் தொடர்பான தேர்ச்சிக்குரிய வேலைகளை அடிப்படையாகக் கொண்ட நோக்கோடு இப்பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்தின் பாடவிதான அபிவிருத்தி 01 இன் ஆரம்பக்கல்விப் பிரிவினரால், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினரது ஒத்துழைப்புடன் இந்நூல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழகம், கல்விக் கல்லூரிகள், ஆசிரியர் கல்விப் பிரிவு போன்றவற்றில் கடமையாற்றும் கல்விமான்களின் ஒத்துழைப்புக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சமயம் தொடர்பான நல்ல விளக்கத்துடன் பொருத்தமான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி, பயபக்தியுடன் இப்புத்தகத்தைக் கையாளுவதற்கு ஆசிரியர்களும் பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு வழிகாட்டுவார்கள் என்பதனை விசேடமாக எதிர்பார்க்கின்றேன்.

கலாநிதி ஜி. பீ. குணவர்தன
பணிப்பாளர் நாயகம்,

தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.

# அறிமுகம்

கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் தரம் 5 இல் கல்வி கற்கும் பிள்ளைகளுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட இப்பாடநூலை அறிமுகப்படுத்துவதின் மூலம் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடநூல் தனியான வாசிப்பு நூல் ஒன்றல்ல. சமயச் செயற்பாடுகள் தொடர்பான அடிப்படையாகக் கொள்ளக்கூடிய அனேக விடயங்களை உள்ளடக்கிய பாடங்களைக் கொண்டமைந்துள்ளது. இது தொடர்பான ஆலோசனைகளை தரம் 5 சைவநெறி ஆசிரியர் கைந்நூலில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பாடத்தினூடாகவும், புதிய வகுப்பறையில் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதுடன், நடைமுறையிலுள்ள வகுப்பறை எதிர்பார்ப்புக்கள் இருப்பின், அவற்றை உரிய பாடங்களுடன் தொடர்புபடுத்திக் கொள்ளவும் வேண்டும். அவ்வாறான எதிர்பார்ப்புகளினூடாக மாணவர்கள் வாழ்வதால் பாடத்திட்டத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ளல் தொடர்பாக விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

சைவநெறி புதிய பாடத்திட்டத்திற்கேற்ப ஒழுங்கமைக்கப்பட்ட இப்பாடநூலைப் பயன்படுத்துவதுடன் தரம் 5 சைவநெறி விடயத்திற்குப் பொருத்தமான கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் வெளிப்படையாகத் தெரியக்கூடிய வேறுபாடுகளைக் கண்டுகொள்ள முடியும் என்பதனையும் விசேடமாக எதிர்பார்க்கின்றேன். இப்பாடத் திட்டமும் பாடநூலும் உண்மையான பக்தி நிலையில் தயாரிக்கப்பட்டதாகும். அதே போன்ற பக்திநிலை எண்ணத்துடன் இதோடு தொடர்புபட்ட கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதனை ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றேன்.

இவ்வேலைகளை உயர்நிலையில் குறித்த நேரத்திற்கு பூரணப்படுத்துவதற்காக அயராது ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டிய பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஜீ. பீ. குணவர்தன அவர்களுக்கும், ஆலோசனை அணியினருக்கும், முன்னின்று எழுதி முடித்த எழுத்தாளர் குழுவினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். அத்தோடு உரிய படங்களை வரைந்து வழங்கியவரினதும், கணனிப்பதிப்புகளைச் செய்துதவியவரினதும் சேவையை மிக மேலாக மதிக்கின்றேன்.

புத்தகங்களைத் திட்டமிட்டுத் தயாரித்து பதிப்புக்கு ஏற்றதாக ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு அனுசரணை வழங்கிய யுனிசெவ் நிறுவகத்தையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

சைவநெறி பாடநூலை மேலும் சிறப்பாக அமைப்பதற்கேற்ற கருத்துக்கள், ஆலோசனைகள் இருப்பின் அவற்றை எனக்கு அனுப்பி வைப்பீர்களாயின் நன்றியுடையவனாவேன்.

விமல் சியம்பலாகொட
பணிப்பாளர், ஆரம்பக்கல்வியும்
விசேடகல்வியும்

தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.

| | | |
|---|---|---|
| பணிப்பு | : | **கலாநிதி ஜீ. பீ. குணவர்தன**<br>பணிப்பாளர் நாயகம்,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| மேற்பார்வை | : | **விமல் சியம்பலகொட**<br>பணிப்பாளர் ஆரம்பக்கல்வியும் விசேடகல்வியும்<br>தேசிய கல்வி நிறுவகம். |
| ஆலோசனைக் குழு | : | **பேராசிரியர் சி. தில்லைநாதன்**<br>தமிழ்த்துறைத் தலைவர்<br>பேராதனைப் பல்கலைக்கழகம்.<br><br>**வ. மகேஸ்வரன்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை<br>பேராதனைப் பல்கலைக்கழகம்.<br><br>**கு. சோமசுந்தரம்**<br>முன்னாள் உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம்.<br><br>**சோ. பாலசுந்தரம்**<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர்,<br>பரீட்சைத் திணைக்களம். |
| நூலாக்கக் குழு | : | **வி. என். எஸ். உதயசந்திரன்**<br>**பூ. சுப்பிரமணியம்**<br>**ந. சிதம்பரநாதன்**<br>**சி. புவனேஸ்வரன்**<br>**உ. நவரட்ணம்**<br>**க. இராமலிங்கம்**<br>**ப. இராமச்சந்திரன்**<br>**கோ. விஜித்தா**<br>**கே. புண்ணியமூர்த்தி** |
| ஓவியம் | : | **எஸ். ராமச்சந்திரன் (சந்ரா)** |
| கணினி எழுத்தமைப்பு | : | **கமலவேணி கந்தையா**<br>தேசிய கல்வி நிறுவகம் |
| விடயப் பதிப்பாசிரியர் | : | **வி. என். எஸ். உதயசந்திரன்**<br>உதவிச் செயற்றிட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம் |
| பதிப்பு | : | **சி. புவனேஸ்வரன்**<br>பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. விநாயகர் | 01 |
| 2. அறுகம்புல்லின் சிறப்பு | 04 |
| 3. சிவம் என்னும் பரம்பொருள் | 08 |
| 4. சுவாமிநாதன் | 11 |
| 5. பாணபத்திரனின் இறைபக்தி | 15 |
| 6. வைவசமய குரவர் | 20 |
| 7. தோத்திரப் பாடல்கள் I | 25 |
| 8. முன்னேச்சரம் | 27 |
| 9. ஆராதனை | 30 |
| 10. திருநந்திதேவர் | 34 |
| 11. சிவசின்னங்கள் | 37 |
| 12. துயர் துடைத்த கண்ணன் | 41 |
| 13. செய்ந்நன்றி அறிதல் | 47 |
| 14. தோத்திரப் பாடல்கள் II | 50 |
| 15. ஆறுமுகநாவலர் | 52 |
| 16. உத்தம வாழ்வு | 55 |

| | |
|---|---|
| 17. பகுத்து உண்ணும் பண்பு | 59 |
| 18. கற்க; கற்றபடி ஒழுகுக | 62 |
| 19. நல்லூர்க் கந்தசுவாமி கோயில் | 65 |
| 20. தடாதகைப் பிராட்டியார் | 68 |
| 21. கேதார கௌரி விரதம் | 71 |
| 22. நல்ல பழக்கங்கள் | 75 |
| 23. பஞ்ச புராணம் | 79 |
| 24. குமரகுருபர சுவாமிகள் | 81 |
| 25. சைவசமயப் பண்டிகைகள் | 87 |
| 26. நன்னெறி | 91 |

# விநாயகர்



எந்தக் காரியத்தையும் விநாயகரை வணங்கி விட்டுத்தான் தொடங்குகிறோம். ஒரு கடிதம் எழுதும்போது கூடப் பிள்ளையார் சுழி போட்டுத்தான் ஆரம்பிக்கிறோம். பிள்ளையார் சுழி என்பது 'ஓம்' என்ற மந்திரத்தின் சுருக்கம். அதை 'உ' என்று போட்டு எழுதுகிறோம். பிள்ளையாரை நினைத்து எக்காரியத்தையும் ஆரம்பிப்பது சைவமரபு. எந்தக் கோயிலுக்குப் போனாலும் முதல் வணக்கம் பிள்ளையாருக்கே உரியது.

கணபதி ஞானத்தின் திருவுருவம். அதனால் அவர் நம்மை எப்போதும் நல்வழியில் நடத்துவார். தவறுகள் ஏற்படாமற் பார்த்துக் கொள்ளுவார். ஆகையால் நாம் நல்வழியிற் காரியசித்தி ஏற்பட முதலில் அவருடைய அருளை நாடுகிறோம்.

விநாயகரின் தோற்றம் வித்தியாசமானது. அவருக்கு யானை முகமும் பேழை வயிறும் உண்டு. பேழை வயிறு இருப்பதன் பொருள், எல்லா உலகங்களையும் தன்னுள் அடக்கியவர் என்பதாகும். அவருக்கு ஐந்து கரங்கள் இருப்பதால் ஐங்கரன் என்றும் அழைக்கப்படுகின்றார்.

ஒரு கரத்திலே பாசம் இருக்கிறது. அது படைத்தலைக் குறிக்கிறது. இன்னொரு கையில் அங்குசம் உண்டு. அது அழிக்குந் தொழிலைக் குறிக்கிறது. மற்றையது அபயகரம் ஆகும். அது பக்தர்களைக் காப்பாற்றும். வேறொரு கையில் மோதகம் உள்ளது. தன்னை வணங்குபவர்களின் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப அந்தக்கை அருள் கொடுக்கும். தும்பிக்கை நீளமானது. எங்கு என்ன நடந்தாலும் அதைத் தட்டிக் கேட்கும் வல்லமை உள்ளது.

விநாயகருக்கு மூஷிகம் எனப்படும் பெருச்சாளி வாகனம் உண்டு. இந்திர சபையில் வாமதேவர் என்பவர் இருந்தார். அவரைக் கிரவுஞ்சன் என்ற கந்தர்வன் ஒருமுறை அவமதித்துப் பேசிவிட்டான். கோபமடைந்த வாமதேவர் கிரவுஞ்சனை எலியாக மாறும்படி சாபமிட்டார். கிரவுஞ்சன் பெருச்சாளியாக உருவெடுத்தான். பராசர முனிவர் என்பவரின் ஆச்சிர மத்துள் நுழைந்து அந்தப் பெருச்சாளி தொல்லைகள் கொடுத்தது. அதன் தொல்லை பொறுக்க முடியாத பராசர முனிவர் விநாயகரை வணங்கி, அந்த எலியைப் பிடிக்கும்படி வேண்டினார். விநாயகரும் அந்த எலியை அடக்கித் தனக்கே வாகனமாக்கிக் கொண்டார். எலி பிள்ளையாருக்கு எவ்வாறு வாகனமாயிற்று என்பதை விளக்கும் சம்பவங்களுள் இதுவும் ஒன்றாகும். இவ்வாறு விக்கினங்களைத் தீர்ப்பதால் அவருக்கு விக்கினேஸ்வரர் என்ற பெயரும் உண்டு.

விநாயகரைப் பல்வகைப் பூக்களாலும், இலைகளாலும் அர்ச்சிக்கலாம். அவற்றுள் முக்கியமானது அறுகம்புல். அறுகம்புல்தான் விநாயகருக்கு மிகவும் விருப்பமானது. விநாயகரை வணங்கும்போது தலையிலே குட்டித் தோப்புக்கரணம் போடுவது மரபாகும்.

எனவே அறுகம்புல் நாயகரான விநாயகரை வழிபட்டுச் சகல சௌபாக்கியங்களையும் பெறுவோமாக.

**"விநாயகனே வெவ்வினையை வேரறுப்பான்"**

## பயிற்சி

சுருக்கமான விடை தருக.

(1) நாம் முதன் முதலில் விநாயகரை வழிபடுவதற்கான காரணம் என்ன?
(2) விநாயகரின் ஐந்து கரங்களும் எவ்வெவற்றை விளக்குகின்றன?
(3) வாமதேவரை அவமதித்துப் பேசியவன் யார்?
(4) விநாயகரை விக்கினேஸ்வரர் என அழைப்பதன் காரணம் யாது?
(5) விநாயகருக்கு மிகவும் விருப்பமானது எது?

## செயற்பாடு

* அறுகம்புல்லைச் சேகரித்து மாலைகட்டி விநாயகருக்குச் சாத்தி வணங்குங்கள்.

# அறுகம்புல்லின் சிறப்பு

ஜனக மகாராஜன் என்பவன் மிதிலாபுரி என்ற பட்டணத்திலிருந்து ஆட்சி புரிந்தான். அவன் நற்குண நல்லியல்புகள் வாய்க்கப் பெற்றவன். ஆனால், தன்னை விட மேலான வேறெந்தப் பரம்பொருளும் இல்லை என்ற அகந்தை அவனிடம் குடிகொண்டிருந்தது. அதுவே அவனிடங் காணப்பட்ட குறைபாடாகும்.



ஜனகனின் அகங்காரத்தைப் போக்கி அவனை நல்வழிப்படுத்த விநாயகப் பெருமான் திருவுளங் கொண்டார். பெருநோய் கொண்ட உடம்புடன் ஓர் ஏழை அந்தணர் வடிவமெடுத்து அரண்மனை வாயிலை அடைந்தார். வாயிற் காவலர்கள் அவரின் தோற்றத்தைக் கண்டு உள்ளே செல்ல அனுமதிக்காது, அரசனிடஞ் சென்று முறையிட்டனர். பசியோடு ஓர் அந்தணர் வந்திருப்பதாகக் கூறினர்.

மன்னன் வியப்புற்றான். இதுவரை யாரும் பசிக்காக யாசகங் கேட்டு வரவில்லை. அதனால் உடனே அழைத்து வரும்படி கட்டளையிட வேதியரும் அரசன் முன் சென்றார். வேந்தன் "உமக்கு என்ன வேண்டும்?" எனக்


கேட்டான். "என் பசியைப் போக்க வேண்டும்" என்று பதிலிறுத்தார் வேதியர்.



மன்னன் அவருக்கு உணவு பரிமாறச் சொன்னான். இடப்பட்ட உணவை ஒரு கணப்பொழுதில் உண்டுவிட்டார். அவர் உண்ண உண்ண உணவைப் பரிமாறிய வண்ணம் இருந்தனர். அரண்மனையில் இருந்த உணவுப் பொருள்கள் எல்லாம் தீர்ந்து போயின; தானியக் கிடங்கும் வெறுமையானது. ஆனால் வேதியரின் பசி தீர்ந்தபாடில்லை. அவரின் பசியைப் போக்குவதற்காக ஊர் மக்களிடம் இருந்த உணவுப் பொருள்களையும் கொண்டு வந்து கொடுத்தனர். அப்பொழுதும் வேதியர் "பசி, பசி" என்றே பரிதவித்தார். மன்னனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. "வேதியரே, எம்மால் இதற்கு மேல் தர ஏதுவும் இல்லை. அதனால் உம் பசி தீர ஏற்ற இடத்தை நாடிச் செல்லலாம்" என்று வேந்தன் கூறினான்.

வேதியருக்குக் கோபம் வந்தது. "வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்குகின்றேன்" என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் உன் இலட்சணம் இதுதானா? வேறு இடம் செல்லச் சொல்லுகிறாயே! "நானே பரம்பொருள் என அகந்தை கொள்ளாதே" என்று கூறிவிட்டு வெளியேறினார். தன்னுடைய அகங்காரம் இந்த வேதியரால் தவிடு பொடியாகி விட்டதே என்று வேந்தன் வேதனையுற்றான்.

அந்த நகரிலே திரிசுரன் என்னும் பரம ஏழை வசித்து வந்தான். அவன் மனைவி விரோசனை. இருவரும் விநாயகரை இடையறாது வழிபடும் பக்தர்கள். அரண்மனையிலிருந்து வெளியேறிய வேதியர் அவர்களின் வீட்டுக்குத்தான் சென்றார். வேதியரைக் கண்டதும் அவர்கள் மனமகிழ்ச்சியுடன் வரவேற்றனர். "அன்பனே, என் பசியைப் போக்கிக் கொள்ள அரண்மனைக்குச் சென்றேன். அரசன் கொடுத்த உணவு எனக்குப் போதவில்லை. அதனால் உன்னை நாடி வந்தேன்" என்று கனிவோடு வேதியர் கூறினார். "இப்போது எங்களிடம் இருப்பதெல்லாம் விநாயகருக்குப் பூசை செய்து வைத்திருக்கும் அறுகம்புல்லே" என்று திரிசுரனும் விரோசனையும் கூறினர்.



அதனைக் கேட்ட வேதியர், "விருப்பமின்றிக் கொடுக்கும் கோடி பொன்னை விட, விருப்பமுடன் கொடுக்குஞ் சிறு பொருளும் எனக்கு விருப்பமுடையதே. அதனால் அறுகம்புல்லையே கொடுங்கள்" என்றார். விரோசனை அறுகம் புல்லை எடுத்து வந்து வேதியர் கையிலே கொடுக்க, அவர் அதை வாயிலிட்டு மென்று விழுங்கினார். அவரின் வயிறு நிறைந்து விட்டது. பசியும் நீங்கியது.

அந்தக் கணமே திரிசுரனுடைய குடிசை பெரிய மாளிகையாயிற்று. சகல செல்வங்களும் நிரம்பி வழிந்தன. இருவரும் வியப்புற்று வேதியரை நோக்கினர். அவர் தம் சுயஉருவத்தைக் காட்டி அருள் பாலித்தார்.

அதேசமயம் மிதிலாபுரிப் பட்டணத்தில் வசித்த அனைவர் வீடுகளிலும் செல்வம் செழித்தது. அரண்மனையிலும் ஏராளமான செல்வம் பெருகியது. தமக்கு நற்புத்தி புகட்டவே விநாயகர் இவ்வாறு லீலை புரிந்தார் என வேந்தனும் உணர்ந்தான். அவனது ஆணவமும் ஒழிந்தது. அகந்தையோடு வழங்கப்பட்ட அரண்மனை உணவை விட அன்போடு வழங்கப்பட்ட அறுகம்புல் உயர்வானது என்பதை இக்கதை விளக்குகிறது.

**அகம்பாவம் கொள்ளாது**
**எந்நாளும் வாழ்வோம்.**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) மிதிலாபுரியை ஆண்ட மன்னன் யார்?
(2) விநாயகப் பெருமான் வேதியர் வடிவங் கொண்டு மன்னனிடம் ஏன் வந்தார்?
(3) வேதியர் மன்னனிடம் என்ன கேட்டார்?
(4) மன்னன் வழங்கிய உணவுகள் அனைத்தையும் வேதியர் என்ன செய்தார்?
(5) விநாயகரை வழிபட்டு வாழ்ந்த ஏழைத் தம்பதியினரின் பெயர்களைக் கூறுக.
(6) அவர்களிடம் வந்த வேதியர் யாது கூறினார்?
(7) அவர்கள் வேதியருக்குக் கொடுத்த உணவு யாது?
(8) இதனால் மிதிலாபுரியில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
(9) மிதிலாபுரி மன்னனிடம் காணப்பட்ட குறைபாடு என்ன?
(10) திரிசுரனிடம் காணப்பட்ட நல்ல பண்பு யாது?

## செயற்பாடு

* ஜனக மகாராசனின் கதையில் வரும் பாத்திரங்களை ஏற்று நாடகமாக நடியுங்கள்.



2. S.P.C. - 090275

# சிவம் என்னும் பரம்பொருள்

மாணவர்கள் சிலர் ஒரு மேசையைச் சுற்றி நிற்கிறார்கள். மேசை மீது சில கடதாசித்துண்டுகளும், வேறு பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை, மாணவர்கள் உற்றுநோக்கியபடி, அசைவற்று நிற்கிறார்கள். சிறிது நேரத்தில், மேசை மீதிருந்த கடதாசித்துண்டுகள் பறந்து செல்கின்றன. கடதாசித் துண்டுகள் பறந்து செல்வதற்கான காரணம் என்ன, என ஆசிரியர் மாணவரை வினவுகிறார்.

"காற்று வீசியதால், கடதாசித் துண்டுகள் அடித்துச் செல்லப்படுகின்றன", என்று மாணவர் பதிலளித்தனர்.

"காற்றைக் கண்ணால் கண்டீர்களா?" என்று ஆசிரியர் வினவினார். இல்லை என்று மாணவர் பதிலளித்தனர்.

"காற்று, கண்ணுக்குத் தெரிவதில்லை என்றாலும் அதற்காகக் காற்றே இல்லை என்று நாம் சொல்ல முடியாது. காற்று எம் உடல் மீது படும்போது, அதனை நாம் உணருகின்றோம்," என்று மாணவன் ஒருவன் கூறினான்.

"மரம், செடி, கொடிகள் காற்று வீசுவதினாலேயே அசைகின்றன," என்றாள் இன்னொரு மாணவி. பட்டம் ஆகாயத்தில் பறக்கிறது என்றால், அங்கே காற்று இருக்கிறது என்பதுதானே அர்த்தம்," என்றான் ஒருவன். "காற்று இருப்பதாலேயே நாங்கள் எல்லோரும் உயிர் வாழ்கிறோம்," என்ற விஞ்ஞான உண்மையை மற்றொரு மாணவி எடுத்துக் கூறினாள். அப்பொழுது ஆசிரியர், ஒரு பொருள் கண்களுக்குத் தெரியவில்லை என்பதைக் கொண்டு அந்தப் பொருள் இல்லை என்று சொல்ல முடியாது என்கிறீர்கள் அப்படித்தானே?" என்றார்.

"ஆமாம்" என்றார்கள் மாணவர்கள்.

“பிள்ளைகளே, நீங்கள் இரவில் காணும் சந்திரனையும், நட்சத்திரங்களையும் பகலில் காண்பதில்லையே ஏன்?” என்று ஆசிரியர் கேட்டார்.

அதற்கு மாணவர்கள் “அவை பகலிலும் உள்ளன. சூரியஒளியின் பிரகாசத்தில் அவை எம் கண்களுக்குப் புலப்படுவதில்லை” என்றனர்.

“நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. இன்னுமொரு விடயமும் நான் உங்களுக்குச் சொல்கிறேன். அதாவது மரங்களுக்கும், செடிகளுக்கும் அடியில் உள்ள வேர்களே நிலத்திலிருந்து நீரைப் பெற்று அவற்றை வாழ்விக்கின்றன. இந்த வேர்கள் நிலத்தின் கீழே இருப்பதால் எமது கண்களுக்குத் தெரிவதில்லை. அதனால் வேர்கள் இல்லை என்று சொல்ல முடியுமா?” என்று ஆசிரியர் வினவினார்.

“ஒருபோதும் சொல்ல முடியாது. வேர்கள்தான் தாவரங்களுக்கு ஆதாரம் என்று விஞ்ஞான பாடத்தில் படித்துள்ளோம்” என்று மாணவர்கள் கூறினர்.

“சரி நாம் இப்போது கடவுளைப் பற்றிப் பார்ப்போம்”. சிவபெருமானே எமது முழுமுதற் கடவுள். அவரின்றி இவ்வுலகில் ஓர் அணுவும் அசையாது. காற்று, அடிவேர்கள் என்பன கண்ணுக்குத் தெரியாதது போலவே கடவுளும் எங்கள் கண்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் அவரே கண்ணுக்குத் தெரிகின்ற இந்த உலகத்தைப் படைத்துக் காத்து வருகின்றார். அவர் என்றும் உள்ளவர்; பிறப்பு, இறப்பு அற்றவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்.

சிவபெருமானுக்குச் சக்தி உமாதேவியார். அவர் சக்தியுடன் இணைந்தே இருப்பவர்.

சிவபெருமானே எங்கள் எல்லோரினதும் தந்தையும், தாயும், சுற்றமும், துணையுமாக உள்ளார். நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள் எல்லோர் மீதும் நாம் அன்பு செலுத்தி வாழ்தலையே அவர் மிகவும் விரும்புபவர். அதுவே சிறந்த வழிபாடும் ஆகும்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

"சிவக்கொழுந்தைச் சிரந் தாழ்த்தி வேண்டுவோமே"

### திருமந்திரம்

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

- திருமூலர் -

**பயிற்சி**

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) கண்களுக்குத் தெரியாத காற்றை நாம் எவ்வாறு உணருகிறோம்?
(2) பகலில் சந்திரனும் நட்சத்திரங்களும் ஏன் நமது கண்களுக்குப் புலப் படுவதில்லை?
(3) எமது முழு முதற் கடவுள் யார்? சிவபெருமான்
(4) கடவுள் எப்படிப்பட்டவர்?
(5) இறைவன் விரும்பும் வழிபாடு யாது?
(6) சிவபெருமானது சக்தியாக விளங்குபவர் யார்? உமாதேவியார்

**செயற்பாடு**

* சிவபெருமானின் மறுபெயர்களைக் கேட்டறிந்து எழுதுங்கள்.

சந்திரசேகர்,

# சுவாமிநாதன்



ஒருமுறை பிரமா திருக்கைலாய மலைக்குச் சுவாமி தரிசனம் செய்ய வந்தார். அங்கு சிவபெருமான் உமாதேவியாருடன் வீற்றிருந்தார். அங்கு தேவர்களும் முனிவர்களும் வந்து இறைவனையும் இறைவியையும் வணங்கிச் சென்று கொண்டிருந்தனர். பொன்மயமான ஆலயத்தின் முன்னே இருந்த கோபுரத்திற்கு அருகில் குழந்தை வடிவினனான முருகன் அமர்ந்திருந்தார். சிவனைத் தரிசிக்க வந்த பிரமா முருகனைக் கண்டும் காணாதவர் போலச் சென்று விட்டார். பிரமா சிவனைத் தரிசித்து விட்டுத் திரும்பி வந்தார். அப்போது முருகன் பிரமாவை அழைத்து அமரும்படி கூறினார். பிரமாவும் முருகன் அருகில் வந்து, உள்ளன்போடு வணங்காது போலியாக வணங்கி நின்றார்.



முருகன் பிரமாவை நோக்கித் "தாங்கள் செய்யும் தொழில் யாது?" என்று கேட்டார். பிரமா "சிவபெருமானின் ஆணையால் படைப்புத் தொழில் செய்கிறேன்" என்றார். அதைக் கேட்ட முருகன் புன்முறுவல் பூத்தார். "அவ்வாறாயின் தாங்கள் வேதம் அனைத்தும் அறிந்திருப்பீர்களே" என முருகன், பிரமாவிடம் வினாவினார். பிரமா "ஆம்" என உரைத்தார். "தாங்கள் கற்ற வேதம் ஒன்றை ஓதுங்கள்" என்றார் முருகன். பிரமா "ஓம்" என்னும் பிரணவ மந்திரத்தை ஓதத் தொடங்கினார். "நிறுத்துங்கள்! 'ஓம்' என்னும் பிரணவத்தின் பொருளைக் கூறுங்கள்" என முருகன், பிரமாவைப் பணித்தார். பிரமா தடுமாறினார்; திகைத்தார். உடனே முருகன் "பிரணவத்தின் பொருள் தெரியாத உமக்குப் படைப்புத் தொழிலும் வேண்டுமா?" எனக் கூறி பிரமாவின் நான்கு தலைகளும் கலங்கும்படி குட்டி, அவரைச் சிறையில் அடைத்தார்.

படைப்புத் தொழிலைச் செய்யும் பிரமா சிறையில் வாடினார். உலகில் படைப்புத் தொழில் நடைபெறவில்லை. இதனால் தேவர்கள் திருக்கைலாய மலைக்குச் சென்று சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான்

நந்தியெம்பெருமானை முருகனிடம் அனுப்பிப் பிரமாவை விடுதலை செய்யும்படி கூறுமாறு பணித்தார். நந்தியெம்பெருமான் முருகனிடம் சென்று அதனைக் கூறினார். முருகன் மிகுந்த கோபம் கொண்டார். பிரமாவைச் சிறையில் இருந்து விடுவிக்க மறுத்தார். நந்தியெம்பெருமான் சிவனிடம் சென்று நடந்ததைக் கூறினார்.

சிவபெருமான் தானே நேரில் வந்தார். "பிரமாவை ஏன் சிறையில் அடைத்தாய்" என முருகனைக் கேட்டார். அதற்கு முருகன் "தந்தையே பிரணவத்தின் பொருள் தெரியாத பிரமன் எவ்வாறு படைப்புத் தொழிலைச் செய்ய முடியும்" என வினாவினார். "பாவம் அவனை விட்டுவிடு" என்று சிவபெருமான் முருகனிடம் கூறினார். முருகன் பிரமாவை விடுதலை செய்தார். பிரமா தன்னை மன்னிக்கும்படி முருகனை வேண்டி, அவ்விடம் விட்டு அகன்றார்.



சிவபெருமான் முருகனை அழைத்து "மைந்தனே! பிரமாவுக்குத் தெரியாத பிரணவப் பொருள் உனக்குத் தெரியுமா?" என்றார். அதற்கு முருகன் "தந்தையே பிரணவத்தின் பொருளைப் பிறர் அறியக் கூறலாமா? மறைமுகமாக அல்லவா கூறவேண்டும்? அதற்கும் ஒருமுறை உண்டு அல்லவா?" என்றார். சிவபெருமான் தன் மைந்தனை அழைத்துத் தமது தொடையின் மீது அமர்த்திக் கொண்டு "குருவாய் அமர்ந்து, பிரணவத்தின் பொருளை என் செவியுள்ளே கூறுக" என்றார். முருகனும் தந்தையான சிவபெருமானுக்குப் பிரணவத்தின் பொருளைக் கூறினார். முருகன் சுவாமிக்கு உபதேசித்தமையால் "சுவாமிநாதன்" என்றும், "சிவகுரு" என்றும் அழைக்கப்படுகிறார்.

**ஞானம் சொன்ன வழிக்கே வழிபட நெஞ்சு உண்டு.**

### பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) பிரமாவின் தொழில் யாது?
(2) முருகன் பிரமாவிடம் எதனுடைய பொருளைக் கேட்டார்?
(3) முருகன் ஏன் பிரமாவைச் சிறையிலடைத்தார்?
(4) பிரமாவைச் சிறையிலிருந்து மீட்கச் சிவபெருமான் யாரை முருகனிடம் அனுப்பினார்?
(5) முருகன் எந்த நிலையில் இருந்து சிவபெருமானுக்குப் பிரணவத்தின் பொருளைக் கூறினார்?
(6) இதனால் முருகன் பெற்ற பெயர்கள் யாவை?

### செயற்பாடு

* ஆசிரியர் உதவியுடன் இந்தக் கதையை நாடகமாக நடியுங்கள்.
* ஆசிரியரை எவ்வாறு மதித்து மரியாதை செய்ய வேண்டும் என்பதை விவரித்து மாணவர் மன்றத்தில் ஓர் உரை நிகழ்த்துங்கள்.

# பாணபத்திரனின் இறைபக்தி

வரகுண பாண்டியன் என்னும் மன்னன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிநாட்டை அரசாட்சி செய்து வந்தான். அம்மன்னன் இசைப்பிரியனாகவும் திகழ்ந்தான். அரசசபைக்குப் பல சங்கீத வித்துவான்கள் வந்து பெறுமதி மிக்க பரிசில்களை மன்னனிடமிருந்து பெறுவது வழக்கம்.

அக்காலத்தில் ஏமநாதன் என்னும் சங்கீத மேதை வடநாட்டிற் பெரும் புகழுடன் வாழ்ந்து வந்தான். அவன் "தானே இசையில் வல்லவன்" என்னும் கர்வம் கொண்டவன். ஒருநாள் அவன் இசை பாடிப் பரிசில் பெறுவதற்காகப் பாண்டிய மன்னனின் அரசசபைக்குத் தனது பரிவாரங்களுடன் வருகை தந்தான்.



ஏமநாதன் அரசனைப் புகழ்ந்து பாடினான். தன் இசைத்திறனால் அவையோரை மெய்ம்மறக்கச் செய்தான். மன்னன் அவனது இசைத் திறமையைப் புகழ்ந்து பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கினான். ஏமநாதனது கர்வம் மேலும் மேலும் அதிகரித்தது.

ஏமநாதனின் கர்வத்தைப் பாண்டிய மன்னன் அடக்க நினைத்தான். மதுரையில் இறைவன் மீது பக்திப் பாசுரங்களை மனமுருகிப் பாடும் பாணபத்திரன் என்னும் இசைக் கலைஞன் இருந்தான். அவனை அரசசபைக்கு அழைத்து வருமாறு மன்னன் தன் ஏவலாளர்களுக்குக் கட்டளையிட்டான். ஏவலாளர்கள் பாணபத்திரனை அரசசபைக்கு அழைத்து வந்தனர்.



மன்னன் அவனை நோக்கிப் "பாணபத்திரரே, உம்மால் ஏமநாதனுடன் போட்டியிட்டுப் பாடி அவனை வெல்ல முடியுமா?" என்று கேட்டான். அதற்குப் பாணபத்திரன் "அரசே, உங்கள் திருவுளத்தின் பலத்தாலும், சிவபெருமானின் அருளாலும் பாடும் வல்லமை பெறுவேன். ஏமநாதனை இசைப்போட்டியில் வெற்றி கொள்வேன். அவனை அடக்குவேன்" என்றான். "நன்று! நாளையே போட்டி நடக்கும். நீ தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்" என மன்னன் பணித்தான்.



மதுரையின் பல இடங்களிலும் ஏமநாதனின் சீடர்கள் இன்னிசை பாடுவதைக் கேட்ட பாணபத்திரன் "நாளை நான் ஏமநாதனை வெற்றி கொள்வது எப்படி?" எனக் கலங்கினான். மதுரையிலுள்ள திருவாலவாய்க் கோயிலை நோக்கி விரைந்தான். அங்கு எழுந்தருளியிருக்கும் சுந்தரேசப் பெருமான் சந்நிதியை அடைந்தான். இறைவனை வீழ்ந்து வணங்கி எழுந்து தன் வேண்டுதலை எடுத்துக் கூறிக் கண்ணீர் சிந்தினான்.



கருணாமூர்த்தியான இறைவன் பாணபத்திரனின் வேண்டுதலை ஏற்றார். வயது முதிர்ந்த விறகு விற்பவனாக வேடம் பூண்டார். தமது தலையிலே விறகுச்சுமையைத் தாங்கி விலை கூறி விற்றுச் சென்றார். பகல் பொழுது கழிந்தது. ஏமநாதன் தங்கியிருந்த வீட்டின் புறத்தே இருந்த திண்ணையில் அமர்ந்து இளைப்பாறினார். சிறிது நேரத்தில் இனிமையான பாடல் ஒன்றைப் பாடினார். உள்ளேயிருந்த ஏமநாதன் இன்னிசையைக் கேட்டான். இசையில் தன்னை மறந்தான். இத்துணை அருமையான இசையை அவன் முன்னொருபோதும் கேட்டதில்லை. வெளியே வந்தான். "நீ யாரப்பா" என்று வினவினான். "அடியேன் இசை மேதை பாணபத்திரனது அடிமை. எனது வயது முதிர்ச்சி காரணமாக என்னைத் தகுதியற்றவனாகக் கருதி சீடனாக ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். ஆகவே நான் இப்போது விறகு விற்றுப் பிழைக்கிறேன்" என்றார்.

இதைக் கேட்டுத் திகைத்த ஏமநாதன் "அப்பா நீ பாடிய பாடலை மீண்டும் ஒருமுறை பாடு" என்று வேண்டினான். விறகு விற்பவன் பாடலை மீண்டும் பாடினான். அப்பாடல் ஏமநாதனின் நாடி நரம்பிலே பல உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. இதைப் போன்ற தேவகானத்தை ஏமநாதன் எப்போதுமே கேட்டதில்லை. பாணபத்திரனால் ஒதுக்கப்பட்ட அடியானின் இசையே இத்தகையது என்றால், பாணபத்திரனின் இசை எப்படியிருக்கும்? என நினைத்துக் கலக்கமுற்றான். இரவோடிரவாகத் தனது பரிவாரங்களுடன் பாண்டிய நாட்டை விட்டு ஓட்டம் பிடித்தான்.

சிவபெருமான் அன்றிரவு பாணபத்திரனின் கனவில் தோன்றி நடந்தவற்றை எடுத்துக் கூறினார். பாணபத்திரனும் மறுநாள் காலையில் மன்னனிடம் இறைவன் தன் கனவில் வந்து கூறிய விடயத்தை எடுத்துக் கூறினான். இதைக் கேட்ட பாண்டிய மன்னன் பாணபத்திரனின் பக்தியின் பெருமையைக் கண்டு வியப்படைந்தான். திருக்கோயிலுக்குச் சென்று சிவனை வணங்கிய பின்னர் பாணபத்திரனை யானை மேல் அமர்த்தி ஊர்வலம் செய்வித்தான். பல பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தான். பாணபத்திரனின் புகழ் பாண்டி நாடெங்கும் பரவியது.

**இறைவன் அடியார்களுக்கு அருள் புரிவான்**

**பயிற்சி**

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டி நாட்டை ஆட்சி செய்த மன்னன் யார்?
(2) வடநாட்டில் இருந்து மதுரைக்கு வந்த இசைமேதை யார்?
(3) பாண்டிய மன்னன் பாணபத்திரனை அழைத்து இட்ட கட்டளை யாது?
(4) விறகு விற்போனாக மதுரைக்கு வந்தவர் யார்?

(5) பாணபத்திரனைப் பாண்டிய மன்னன் எவ்வாறு கௌரவித்தான்?
(6) ஏமநாதனிடம் காணப்பட்ட குறைபாடு யாது?
(7) ஏமநாதனின் கர்வம் அடங்கக் காரணம் என்ன?
(8) ஏமநாதன் ஏன் இரவோடிரவாகப் பாண்டி நாட்டை விட்டு ஓடினான்?

## செயற்பாடு

* ஆசிரியரின் உதவியுடன் இக்கதையில் வரும் பாத்திரங்களை ஏற்று நாடகமாக நடியுங்கள்.

- வரகுண பாண்டியன்
- ஏமநாதன்
- பாணபத்திரன்
- விறகு விற்பவர்

# சைவசமய குரவர்

நாம் இன்று சைவசமயிகளாகத் திகழக் காரணமாக இருந்தவர்கள் நால்வர். இவர்களைச் சைவசமயகுரவர் என்கிறோம். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவசமய குரவர் ஆவர். இவர்கள் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்கள். சிவத் தலங்கள் தோறும் சென்று இறைவனை வணங்கிப் பாசுரங்கள் பாடியவர்கள். சைவசமயத்தின் உண்மையை நிலைநாட்டியவர்கள். இறையருளால் பல அற்புதங்களைச் செய்தவர்கள். சமய குரவருள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் தேவாரப் பதிகங்களைப் பாடியமையினால் தேவார முதலிகள் என்றழைக்கப்படுகின்றனர். மாணிக்கவாசகர் திருவாசகம், திருக்கோவையார் என்பனவற்றை இயற்றித் தந்துள்ளார்.

## திருஞானசம்பந்தர்



திருஞானசம்பந்தர் சோழவள நாட்டிலே சீர்காழி என்னும் ஊரிலே பிறந்தார். தந்தையார் பெயர் சிவபாதவிருதயர். தாயார் பெயர் பகவதியார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஆளுடைய பிள்ளையார். அவர் மூன்று வயதிலே உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டார். அதனால் ஞானசம்பந்தர் என்றழைக்கப்பட்டார். அவர் தமது மூன்றாவது வயதிலே 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடினார்.

சிவபெருமான் குழந்தையான சம்பந்தருக்கு பொற்றாளம், முத்துச்சிவிகை, முத்துக்குடை என்பவற்றைக் கொடுத்தருளினார். திருஞானசம்பந்தர் சிவபெருமானுடைய அருளினாற் பல அற்புதங்களைச்

செய்தார். முயலகன் என்னும் நோயை நீக்கியமை, பாண்டியனின் வெப்புநோய் போக்கியமை, பாம்பு தீண்டிய வணிகனை உயிர்ப்பித்தமை, படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கியமை. திருமறைக் காட்டிலே திருக்கதவு மூடப் பாடியமை, பூம்பாவையை உயிர்ப்பித்தமை முதலியனவாகும். இவர் அருளிய தேவாரங்கள் முதல் மூன்று திருமுறைகளுள் அடங்குகின்றன. இவரை ஆளுடைய பிள்ளையார், முத்தமிழ்விரகர், சைவசிகாமணி எனவும் அழைப்பர்.

## திருநாவுக்கரசர்



திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூர் என்னும் ஊரிலே திருநாவுக்கரசர் பிறந்தார். தந்தையின் பெயர் புகழனார். தாயார் பெயர் மாதினியார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மருணீக்கியார். அவரின் தமக்கையின் பெயர் திலகவதியார். திருநாவுக்கரசர் சைவ சமயத்தை விட்டுச் சிலகாலம் சமண சமயத்திற் சேர்ந்திருந்தார். திலகவதியார் தனது தம்பியாரை மீண்டும் சைவசமயத்திற்குக் கொண்டு வரும் பொருட்டுச் சிவபெருமானைப் பிரார்த்தித்தார். திருநாவுக்கரசருக்குச் சூலைநோய் ஏற்பட்டது. அந்நோயின் கொடுமையைத் தாங்க இயலாது தமக்கையாரிடம் வந்தார். திலகவதியார் திருநீறு கொடுத்துச் சூலை நோயைத் தணித்தார். திருநாவுக்கரசர் மீண்டும் சைவசமயத்தைத் தழுவினார்.

திருநாவுக்கரசர் இறைவனிடமிருந்து பொதிசோறு பெற்றார். அவர் இறையருளால் பல அற்புதங்களைச் செய்தார். பாம்பு தீண்டிய மைந்தனை உயிர்ப்பித்தார். பஞ்சம் போக்கப் படிக்காசு பெற்றார். திருமறைக்காட்டு

ஆலயத்தின் கதவு திறக்கப் பாடினார். அவர் முதலாவதாக "கூற்றாயினவாறு" எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடினார். அவரின் மறுபெயர்கள் வாகீசர், அப்பர், உழவாரப் படையாளி, தாண்டகவேந்தர் என்பனவாகும். திருநாவுக்கரசர் பாடிய தேவாரங்கள் நான்காம், ஐந்தாம், ஆறாந் திருமுறை களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

## சுந்தரர்



திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூர் என்னும் ஊரிலே சுந்தரமூர்த்தி நாயனார் அவதரித்தார். இவருடைய தந்தையார் பெயர் சடையனார். தாயார் பெயர் இசைஞானியார். சுந்தரருக்குப் பெற்றோர்களால் இடப்பட்ட பெயர் நம்பியாரூரர். அவர் சிறுகுழந்தையாக இருக்கும்போது நரசிங்கமுனையர் என்னும் மன்னரால் செல்வச் செழிப் போடு வளர்க்கப்பட்டார். திருமணப் பருவம் அடைந்த அவர் மணக்கோலத் தோடு கல்யாணப் பந்தலில் நிற்கும் போது, சிவபெருமான் பிராமண வடிவத் தோடு எழுந்தருளி சுந்தரரைத் தடுத் தாட்கொண்டார்.

சிவபெருமான் சுந்தரருக்குப் பொதிசோறு கொடுத்தார்; நெல்லைப் பெற்றுக் கொடுத்தார்; செங்கட்டிகளைப் பொன்கட்டிகளாக மாற்றினார்; பரவையாரிடம் தூது சென்றார். சுந்தரர் இறையருளால் முதலை உண்ட பாலகனை மீட்டார். அவரின் மறுபெயர்களாவன வன்றொண்டர், தம்பிரான் தோழர் என்பனவாகும். அவர் முதலாவதாக "பித்தாபிறை சூடி"... எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடினார். அவரால் பாடப்பட்ட தேவாரங்கள் ஏழாந் திருமுறைக்குள் அடங்குகின்றன.

## மாணிக்கவாசகர்



பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூரிலே மாணிக்கவாசகர் பிறந்தார். அவரின் தந்தையார் பெயர் சம்புபாதாசிரியர். தாயார் பெயர் சிவஞானவதியார். திருவாதவூரிலே பிறந்தமையால் 'திருவாதவூரர்' என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். அவரது அறிவுத் திறத்தையும், பெருமையையும் அறிந்த அரிமர்த்தன பாண்டிய மன்னன் தன் முதல்மந்திரியாக அமர்த்திக் கொண்டான். மந்திரிப் பதவியிலிருக்கும்போது ஒருநாள் குதிரைகள் வாங்கச் சென்றார். வழியிலே திருப்பெருந்துறையிலே குருந்த மரநிழலிலே சிவபெருமானால் ஆட்கொள்ளப் பட்டார்.

மாணிக்கவாசகர் இறையருளால் தனக்கு வந்த சோதனைகள் அனைத்தையும் வென்றார். சிவபெருமான் அவருக்காகப் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்டார். தில்லைச் சிதம்பரத்தில் இறைவனோடு கலந்தார். அவரின் மறுபெயர்கள் மணிவாசகர், கோவைவேந்தன் என்பனவாகும். மாணிக்கவாசகரே திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எமக்குத் தந்தருளினார்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவசமயத்திற்கு ஆற்றிய அளப்பரிய தொண்டின் காரணமாகச் சமயகுரவர் எனவும், சமயாசாரியார் எனவும் அழைக்கப்படலாயினர். அவர்கள் இறைவனோடு இணைந்த தினங்களே அவர்களின் குருபூசைத் தினங்களாகக் கொண்டாடப்படுகின்றன.



3. S.P.C. - 090275

சமயகுரவரின் குருபூசைத் தினங்கள் பின்வருமாறு அமைகின்றன:

| | | |
|---|---|---|
| திருநாவுக்கரசர் | - | சித்திரைச்சதயம் |
| திருஞானசம்பந்தர் | - | வைகாசி மூலம் |
| சுந்தரமூர்த்தி | - | ஆடிச்சுவாதி |
| மாணிக்கவாசகர் | - | ஆனிமகம் |

சைவசமய குரவர்களின் குருபூசைத் தினங்களைக் கொண்டாடுவதே நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறாகும். நால்வர் காட்டிய வழியை எப்பொழுதும் பின்பற்றி வாழ்வோம்.

**நால்வர் காட்டிய வழியில் நாமும் நடப்போம்.**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) சைவசமய குரவர்கள் யார்?
(2) தேவாரமுதலிகள் என அழைக்கப்படுபவர்கள் யாவர்?
(3) மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் எவை?
(4) ஆளுடைபிள்ளையார் 'ஞானசம்பந்தர்' எனப் பெயர் பெற்றமைக்கான காரணம் என்ன?
(5) திருஞானசம்பந்தர் "தோடுடையசெவியன்" என்னும் தேவாரத்தை எத்தனையாவது வயதில் பாடினார்?
(6) திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள் யாவை?
(7) மருணீக்கியாருக்கு ஏன் சூலை நோய் ஏற்பட்டது?
(8) மருணீக்கியாரின் சூலைநோய் எவ்வாறு தணிந்தது?
(9) திருநாவுக்கரசர் செய்த அற்புதங்கள் யாவை?
(10) சுந்தரமூர்த்திநாயனார் எச்சந்தர்ப்பத்தில் தடுத்தாட்கொள்ளப்பட்டார்?
(11) சுந்தரமூர்த்திநாயானார் செய்த அற்புதங்கள் யாவை?
(12) திருவாதவூரருக்குப் பாண்டிய மன்னரால் என்ன பதவி வழங்கப்பட்டது?
(13) மாணிக்கவாசகர் எங்கு, யாரால் ஆட்கொள்ளப்பட்டார்?
(14) சமயகுரவர் நால்வரினதும் குருபூசைத் தினங்களைக் குறிப்பிடுக.

## செயற்பாடு

* சமயகுரவர் ஒவ்வொருவரினதும் தாய் தந்தை பெயர், பிறந்த ஊர், செய்த அற்புதங்கள் என்பவற்றை உள்ளடக்கும் ஒரு சிறு புத்தகம் ஆக்குங்கள்.

# தோத்திரப் பாடல்கள் - (1)

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

- திருஞானசம்பந்தர்

தேவாரம்

கங்கையைச் சடையில் வைத்தார்
கதிர்பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார்
திசை திசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார்
மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார்
ஐயன் ஐயாற னாரே

- திருநாவுக்கரசர்

தேவாரம்

நத்தார் படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம் மத யானையுரி போர்த்த மண வாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே.

- சுந்தரர்

திருச்சிற்றம்பலம்


## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே.
உத்தமா தானசற் குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

- அருணகிரிநாதர் -

பக்தியுடன் பாடி மன அமைதி பெறுவோம்.

# முன்னேச்சரம்

இலங்கையிலே சிவனுக்குரிய தொன்மைமிக்க ஆலயங்களுட் முன்னேச்சரமும் ஒன்றாகும். இது இலங்கையின் வடமேல் மாகாணத்தில் சிலாபம் என்னும் ஊரிற் சிறப்புமிக்க ஆலயமாகத் திகழ்கிறது. தற்காலத்தில் தெதுறுஓயா என அழைக்கப்படும் மாயவனாற்றங் கரைக்கு அண்மையில் இது அமைந்துள்ளது. வருடத்தில் இருமுறை மகோற்சவம் நடைபெறும் ஆலயம் என்ற பெருமை இதற்கு உண்டு. முன்னைநாதப் பெருமானுக்கும், வடிவாம்பிகை அம்பாளுக்கும் இவ்வுற்சவங்கள் நடைபெறும். இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர் முன்னைநாதப்பெருமான். இறைவியின் பெயர் வடிவாம்பிகை அம்பாள் ஆகும்.

இவ்வாலயத்திலே மாசி மாத மக நட்சத்திரத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு அன்னை வடிவாம்பிகையின் உற்சவம் பத்து நாட்கள் நடைபெறும். இது ஒரு சிவத்தலமாக இருப்பினும், சக்திக்கு இத்துணை முக்கியத்துவமளிப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் வசந்த நவராத்திரி விழாவும் பக்தோற்சவ விழாவும் இங்கு நடைபெறும் திருவிழாக்களுள் மிக முக்கியமானவை. ஆண்டுதோறும் ஆவணிப் பௌர்ணமி தினத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு இருபத்தேழு நாட்கள் முன்னைநாதப்

பெருமானின் உற்சவம் இடம்பெறும். அடியவர்கள் இத்தினங்களில் இறைவனையும் இறைவியையும் வழிபாடு செய்து ஆனந்தப் பெரு வெள்ளத்திலே திளைப்பர்.

இத்தலந் தொடர்பாகப் புராணக் கதை ஒன்று கூறப்படுகிறது. மகாவிஷ்ணுவின் அவதாரமாக இராமபிரான் இவ்வுலகிலே தோன்றினார். தன்னை எதிர்த்த சிவபக்தனான இராவணனை அழித்தார். இதனால் தனக்கேற்பட்ட தோசம் நீங்குவதற்காக இத்தலத்திலே சிவலிங்கம் அமைத்துப் பூசை செய்து வழிபட்டார் என இதிகாசங்கள் கூறுகின்றன.

புராதன காலத்தில் ஆறாம் பராக்கிரமபாகு, ஒன்பதாம் பராக்கிரமபாகு, குளக்கோட்டன் போன்ற பண்டைய மன்னர்கள் மானியங்கள் பல வழங்கி இவ்வாலயத்தைப் பராமரித்துப் போற்றினர். போர்த்துக்கேயர் ஆட்சியின் போது இந்த ஆலயம் நிலைகுலைந்தது. எனினும் அடியவருள்ளத்திற் கோயில் கொண்ட எம்பெருமானை அவர்களால் அகற்ற முடியவில்லை. எனவே கீர்த்தி ஸ்ரீ இராசசிங்க மன்னனால் இவ்வாலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டது. 1753 இலே கும்பாபிடேகமும் செய்து வைக்கப்பட்டது.

இன்று இவ்வாலயத்தில் வீற்றிருக்கும் அன்னை வடிவாம்பிகை அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகி அருட்சக்தி மிக்கவளாக விளங்குகிறார். வடிவாம்பிகை சமேத முன்னேஸ்வரப் பெருமானின் அருளாட்சியில் நாமுந் துன்பம் நீங்கி இன்பமாய் வாழ்வோம்.

"முன்னேச்சரம் செல்வோம்;
மன மாசைப் போக்குவோம்".

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) முன்னேச்சர ஆலயம் எங்கே அமைந்துள்ளது?
(2) முன்னேச்சரத்தின் தனிச்சிறப்பு யாது?
(3) வடிவாம்பிகை அம்மாளுக்கு நடைபெறும் தீர்த்தோற்சவம் எப்போது நடைபெறும்?
(4) முன்னைநாதப்பெருமானுக்காக நடைபெறும் தீர்த்தோற்சவம் எப்போது நடைபெறும்?
(5) முன்னேச்சரத்தில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டவர் யார்?
(6) முன்னேச்சர ஆலயத்திற்கு மானியங்கள் வழங்கித் தொண்டு செய்த மன்னர்கள் யாவர்?
(7) சக்திபீடங்கள் எத்தனை?

## செயற்பாடு

* அதிபர், ஆசிரியர், பெற்றோர் அனுசரணையுடன் முன்னேச்சர ஆலயத்தை வழிபடுவதற்கும், தலச் சிறப்பைப் பார்வையிடுவதற்கும் ஒரு வெளிக்களப் பிரயாணத்தை மேற்கொள்ளுங்கள்.

# ஆராதனை

ஆராதனை என்பது வணக்கம், பூசனை என்னும் பொருள் தரும். நாம் இறைவனை வீட்டிலும் ஆலயங்களிலும் ஆராதிக்கிறோம். நாம் இறைவனை ஆராதிக்கும்போது எமக்கு மட்டுமன்றிப் பிறருக்கும் எல்லா நன்மைகளும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தல் வேண்டும்.

ஆலயம் என்பது ஆன்மா லயிக்கும் இடம் என்பர். ஆலயத்தில் மனத்தை ஒருநிலைப்படுத்தி இறைவனை வழிபாடு செய்ய முடியும். ஆலயத்தில் அர்ச்சகர் இறைவனுக்குத் தூபதீபம் காட்டி மலர்களால் அருச்சனை செய்வார். அவ்வேளை நாம் திருமுறைகளைப் பாடி வழிபாடு செய்வோம். வழிபாட்டில் தீபாராதனை சிறப்பிடம் பெறுகிறது. தீப + ஆராதனை தீபாராதனை எனப்படுகிறது. இதன் பொருள் தீபத்தால் இறைவனை வழிபடுதல் என்பதாகும்.

தீபாராதனை இடம்பெறும் போது அடியார்கள் இறைவனது திருக்கோலத்தை நன்கு தரிசிப்பர். தீப தரிசனத்தால் உள்ளம் தூய்மை அடைகிறது. தீபங்கள் மூன்று முறை ஓங்கார வடிவில் காட்டப்படும். முதலில் உலக நன்மைக்காகவும் இரண்டாவதாக நாட்டு நன்மைக்காகவும் மூன்றாவதாக எல்லா உயிர்களினதும் நன்மைக்காகவும் தீபங்கள் காட்டப் படுகின்றன என்று சிவாகமங்கள் கூறுகின்றன.



ஒற்றைத்தீபம், அடுக்குத்தீபம், நாகதீபம், அன்னதீபம், இடபதீபம், கும்பதீபம், கர்ப்பூரதீபம், வில்வதீபம், பஞ்சாராத்தி எனப் பலவித தீபங்கள் உள்ளன. தீபாராதனை நடக்கும்போது மங்கல வாத்தியங்கள் ஒலிக்கும்.



ஆலயப் பூசை ஆராதனைகளில் மணியோசை முக்கிய இடம் பெறுகிறது. கண்டாமணியோசையுடனேயே ஆலயத்தில் பூசைகள் ஆரம்பிக்கின்றன. இதனால் இதனை ஆயத்தமணி என்றும் கூறுவர். இவ்வோசை கேட்டவுடன் அடியார்கள் ஆலயத்தை நோக்கிச் செல்வர்.



பூசகர் பஞ்சாராத்தி காட்டும்போது கொத்துமணி ஒலிக்கும். அவ்வோசையுடன் இணைந்ததாகப் பூசகரின் கையிலிருக்கும் கைமணியும் ஒலிக்கும். இவ்வொலிகள் அடியார்களின் மனத்தில் ஊடுருவி அவர்களை மெய்ம்மறக்கச் செய்யும்; பக்திப் பரவசமடையச் செய்யும்.

மேலும் ஆலயத்தின் வாசற்கதவில் சின்னஞ்சிறிய மணிகள் பொருத்தப் பட்டிருக்கும். மணிக்கதவில் தொங்கும் மணிகள் கதவைத் திறக்கும் போதும் மூடும்போதும் நெடுநேரம் ஒலித்துக் கொண்டே இருக்கும். இதனால் அடியார்கள் மனதில் இனிமையும் பக்தியுணர்வும் பரவும்.



மங்கல வாத்தியங்களாவன மேளம், நாதஸ்வரம், பேரிகை, மத்தளம், தாளம் என்பன ஆகும். மங்கல வாத்தியங்கள் ஒலிப்பதால் ஆலயத்தில் பக்திச் சூழ்நிலை நிலவும்.

வழிபாட்டில் திருமுறை ஓதுதல் ஓர் அங்கமாக விளங்குகிறது. கூட்டு வழிபாட்டில் பஜனை, கூட்டுப் பிரார்த்தனை என்பன இடம் பெறுகின்றன. வழிபாட்டினால் இறைவனின் மீதான பக்தி வளருகின்றது.

சமயவாழ்வு செழுமை அடைவதற்கும், தூய்மை பெறுவதற்கும் வழிபாடு அடிப்படையாக உள்ளது. சைவ மக்களின் ஆன்ம ஈடேற்றத்தில் வழிபாடுகள் முக்கிய இடம் பெறுகின்றன.

**"தெய்விக ஒளியில் ஆணவம் அகலும்"**

### பயிற்சி


**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) "ஆராதனை" என்பதன் பொருள் யாது?
(2) ஆன்மா லயிக்கும் இடம் எது?
(3) தீபம் மூன்று முறை காட்டப்படுவதன் நோக்கம் யாது?
(4) தீப வகைகளைக் கூறுக.
(5) ஆலயத்தில் உள்ள மணிவகைகள் எவை?
(6) ஆலயத்தில் பக்திச் சூழலை வளர்க்கும் மங்கல வாத்தியங்கள் எவை?

### செயற்பாடு

* வெள்ளிக்கிழமைகளில் ஆலயத்திற்குச் சென்று பூசையிற் கலந்து கொண்ட பின்னர் தோத்திரப் பாடல்களைப் பாடுதலிலும், கூட்டுப் பிரார்த்தனையிலும் ஈடுபடுங்கள்.

# திருநந்திதேவர்



சிவன் கோயில்களிலே ஆராதனைக் காலங்களில் மக்கள் பலரும் கூடி நின்று தரிசனம் செய்யும் மண்டபத்தில் நந்தி, பலிபீடம், கொடிமரம் என்பனவற்றைக் காணலாம். இவற்றுள் நந்தி மூலத்தானத்தில் வீற்றிருக்கின்ற எம்பெருமானை நோக்கியவண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. தனக்கு அண்மையிலுள்ள பலிபீடத்தை நோக்காமல் மூலத்தானத்தை நோக்கியவண்ணம் இருத்தல், வழிபடும் அடியார்களுக்கு நல்லதொரு கருத்தை உணர்த்துவதாக உள்ளது. ஆணவம் முதலிய பாசங்களைப் பலியிட்டு இறையடி சேர்தலே உரியது என்னும் கருத்து அதுவாகும்.

திருநந்திதேவர் வரலாற்றைப் புராணம் பின்வருமாறு கூறுகிறது.

முன்னொரு காலத்திலே, சிலாதர் என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தார். அவர் யாகம் செய்ய விரும்பினார். யாகம் இடம் பெறுகின்ற நிலப்பகுதி யாகபூமி எனப்படும். யாகபூமியைத் துப்பரவு செய்வதற்காக உழுதபொழுது, அங்கு ஒரு பெட்டகம் தென்பட்டது. முனிவர் அப்பெட்டகத்தைத் திறந்து பார்த்தார். அதனுள்ளே அழகான குழந்தை ஒன்று உயிருடன் காணப்பட்டது.

முனிவர் அக்குழந்தையைத் தமது ஆசிரமத்துக்குக் கொண்டு சென்றார். அக்குழந்தைக்குச் 'செபேசர்' என்று பெயர் சூட்டினார்; அன்புடன் வளர்த்து வந்தார். செபேசர் கல்வி, கேள்வி ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கினார். வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள் என்பவற்றைக் கற்றுத் தேறினார். சிவபெருமானே முழுமுதற் கடவுள் எனப் போற்றிப் பூசனைகள் புரிந்தார். சிவபெருமான் மனங்கனிந்து செபேசருக்குத் திருவருள் பாலித்து, "திருநந்திதேவர்" என்னுந் திருப்பெயரையும் வழங்கியருளினார்.



திருநந்திதேவர் பல்லாண்டுகள் தவஞ் செய்வதில் ஈடுபட்டார். பின்னொரு முறை திருநந்திதேவர் திருக்கைலாயத்திற்குச் சென்றபோது, சிவபெருமான் அவருக்கு வாயிற்காவலர் பதவியை வழங்கினார். அத்துடன் இறைவனைத் தாங்கும் இடபமாகவும், வெற்றியை விளக்கும் நந்திக்கொடியாகவும் விளங்கும் பேற்றினையும் அவர் பெற்றார்.

மூல மூர்த்தியை உள்ளே சென்று வணங்குவதற்கு நந்திதேவரை வணங்கித் துதித்து அனுமதி தந்தருளுமாறு பிரார்த்திப்பது எமது கடமை யாகும்.

**பாசம் அறுப்போம்; பாவம் தீர்ப்போம்; பரமனடி நாடுவோம்.**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) சிலாதர் முனிவர் யாது செய்ய விரும்பினார்? யாகம் செய்ய விரும்பினா
(2) யாக பூமி எனப்படுவது யாது?
(3) நந்தியம்பெருமான் யாரை நோக்கிய வண்ணம் அமர்ந்திருப்பார்?
(4) நாம் நந்திதேவரிடம் எதனை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்?
(5) சிவபெருமானுக்குரிய கொடி எது? நந்திக்கொடி

## செயற்பாடு

* நந்திக் கொடியை வரைந்து வர்ணம் தீட்டுங்கள்.

2) யாகம் இடம் பெறுகின்ற நிலப்பகுதி யாகபூமி எனப்படும்.
3) நந்தி மூலஸ்தானத்தில் வீற்றிருக்கின்ற எம்பெருமானை நோக்கிய வண்ணம் அமர்ந்திருப்பார்
4) மூல மூர்த்தியை உள்ளே சென்று வணங்குவதற்கு அனுமதி தந்தருளுமாறு பிரார்த்திக்கிறோம்.

# சிவசின்னங்கள்

விபூதியும் உருத்திராக்கமும் சிவசின்னங்களாகும். இவை, எம்மைச் சிவபெருமானை நினைக்கச் செய்து தீமைகளிலிருந்து பாதுகாக்கின்றன. சிவசின்னங்கள் இறைவனையும் அவனது திருவருட் கருணையையும் குறிக்கும் சைவசாதனங்களாகும். சைவமக்கள் அவற்றைப் புனிதமாகப் பேணி, அணிந்து வருதல் இன்றியமையாத சைவ ஒழுக்கமாகும்.

## விபூதி



விபூதியைத் திருநீறு என்றும் கூறுவர். பசுவின் சாணத்தை எடுத்து நெருப்பில் எரித்து முறைப்படி தயாரிக்கப்பட்ட வெண்மையான விபூதியைப் புதுப் பாண்டத்தில் இட்டு மல்லிகை, முல்லை போன்ற வாசனை மலர்களையும் அதற்குள் வைக்க வேண்டும். பாண்டத்தின் வாயைத் தூய்மையான வெண் துணியினாலே கட்டிவிட்டால் விபூதி அதனுள் பக்குவமாக இருக்கும். அணிவதற்குத் தேவையான விபூதியை எடுத்து ஒரு பட்டுப் பையிலேனும், சம்புடத்திலேனும் வைத்துக் கொள்ள வேண்டும்.

வடக்குமுகமாகவேனும், கிழக்குமுகமாகவேனும் நோக்கியபடி நின்று கொண்டு விபூதியை வலக்கை நடு மூன்று விரல்களினாலும் எடுத்து, நிலத்திற் சிந்தாவண்ணம் அண்ணாந்து 'சிவசிவ' என்று சொல்லி நெற்றியிலே தரித்தல் வேண்டும்.

காலை, நண்பகல், மாலை ஆகிய நேரங்களிலும் நித்திரைக்கு முன்னும் பின்னும், நீராடிய பின்னும், உணவு உண்பதற்கு முன்பும் பின்பும் விபூதி தரித்தல் மரபாகும்.

சிவனடியார் ஒருவர் விபூதியைக் கொடுத்தால் அவரை வணங்கி, எழுந்து இடக்கையின் மேல் வலக்கையை வைத்து விபூதியை வாங்கி அணிதல் வேண்டும். விபூதி நிலத்திற் சிந்தினால் அவ்விடத்தை நீரினால் சுத்தம் செய்தல் வேண்டும்.

விபூதியை உத்தூளனமாகவேனும், திரிபுண்டரமாகவேனும் தரிக்கலாம். சமயதீட்சை பெற்றவர்கள் திரிபுண்டரமாகத் தரித்தல் வேண்டும். அவர்கள் சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாளிரண்டு, புயங்களிரண்டு, முழங்கையிரண்டு, மணிக்கட்டுகளிரண்டு, விலாப்புறமிரண்டு, முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் தரிக்க வேண்டும்.

### உருத்திராக்கம்



உருத்திராக்கம் என்பது சிவபெருமானுடைய கண் எனப் பொருள்படும். உருத்திரன் என்றால் பரமசிவன். அக்கம் என்றால் கண். உருத்திராக்க மணிகளைப் பொன், வெள்ளி, முத்து, பளிங்கு முதலியன இடையிடையே இட்டு முகத்தோடு முகமும், அடியோடு அடியும் பொருந்தக் கோத்துத் தரித்தல் வேண்டும்.

மதுபானம் அருந்துவோர் மாமிசம் உண்போர் உருத்திராக்கம் அணிதல் கூடாது. ஆசாரம் உடையோரே தரிக்க வேண்டும். சந்தியாவந்தனம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலய தரிசனம், புராணம் படித்தல், கேட்டல் முதலியன செய்யும் போது உருத்திராக்கம் தரித்தல் வேண்டும். குடுமி, காது, கழுத்து, மார்பு, புயம், கை முதலியன தரித்தற்குரிய இடங்களாகும்.

நாம் எமது சைவசமயச் சின்னங்களை மதித்து இறைசிந்தனையோடு அணிந்து வருவோமானால் இறைவனுடைய திருவருள் எமக்குக் கிடைக்கும் என்பது உறுதி.

**சிவசின்னம் அணிந்து செம்மை பெறுவோம்.**

### திருச்சிற்றம்பலம்
### தேவாரம்

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே

– திருஞானசம்பந்தர் –

**பயிற்சி**

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) சிவசின்னங்கள் யாவை? வீபூதி, சந்தனம், குங்குமம், உருத்திராக்கம்
(2) நாம் சிவனடியாரிடமிருந்து விபூதியை எவ்வாறு பெற்றுக் கொள்ள வேண்டும்?
(3) விபூதியைத் தரிக்கும் முறைகள் இரண்டையும் கூறுக.
(4) எமது உடம்பிலே திரிபுண்டரமாக விபூதி தரிக்கப்பட வேண்டிய பதினாறு இடங்களையும் குறிப்பிடுக.
(5) உருத்திராக்கம் என்பதன் பொருள் யாது?
(6) உருத்திராக்கம் அணியத் தகுதியுடையோர் யார்?
(7) உருத்திராக்கம் தரித்தற்குரிய இடங்களைக் கூறுக.
(8) திருநீறை எவ்வெக் காலங்களில் தரிக்க வேண்டும்?
(9) திருநீற்றின் மகிமை பற்றிச் சுருக்கமாக எழுதுக.



4. S.P.C. - 090275


## செயற்பாடு

* ஆசிரியர் கொடுக்கும் திருநீற்றை முறைப்படி பெற்று வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நின்று நிலத்திற் சிந்தாது அண்ணாந்து "சிவசிவ" என்று சொல்லி நெற்றியில் அணியுங்கள்.

* அதிபர், ஆசிரியர், பெற்றோர் முதலியோரின் அனுசரணையுடன், உமது வகுப்பிலுள்ள சைவ மாணவர்கள் யாவரும் சிவதீட்சை பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுங்கள்.

* திருநீறு தயாரிக்கும் விதத்தை ஊர்ப் பெரியவர்களிடம் கேட்டு அறியுங்கள்.

# துயர் துடைத்த கண்ணன்



வடமதுரை என்னும் மாநகருக்கு அருகில் அவந்தி எனும் ஓர் ஊர் உண்டு. அங்குள்ள அடர்ந்த மரங்களையுடைய மலைச்சாரலில் முனிவர்கள் சிறுகுடில்களை அமைத்து வாழ்ந்து வந்தனர். அம் முனிவர்களுள் சுதாமர் என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் தமது கிழிந்த ஆடைகளைத் தைத்தே எப்போதும் அணிந்து கொள்வதால் அவரைக் குசேலர் எனப் பெயரிட்டு அழைத்தனர்.

குருகுல முறையில் கல்வி கற்றுத் தேர்ந்த குசேலர் தவத்திலும் சிறந்து விளங்கினார். நற்குணங்கள், நற்செய்கைகள் நிரம்பிய சுசீலை என்னும் பெண்ணைத் திருமணம் செய்து இனிமையான இல்லறம் நடாத்தி வந்தார். அவர்களுக்கு இருபத்தேழு குழந்தைகள் இருந்தனர்.



பிள்ளைகள் வளர வளர வறுமையும் சேர்ந்தே வளர்ந்தது. உணவு போதாமையாற் குழந்தைகள் சோர்ந்து இருந்தனர். இத்தகைய கொடுமையான வறுமையிலும் குசேலர் பிறரிடம் எவ்வித உதவிகளையும் பெற விரும்பவில்லை. சுசீலை பிள்ளைகள் படும் துன்பங்களைக் கண்டு கண்ணீர் சொரிந்தாள்.

ஒருநாள் சுசீலை தன் கணவனிடம் சென்று 'சுவாமி எமது குடும்பத்தின் நிலையைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். நாம் உணவின்றி இருக்கலாம். எமது குழந்தைகள் உணவின்றித் தவிக்கலாமா? என்னால் இக் கொடுமையைப் பார்த்துச் சகிக்க முடியவில்லை' என்று துயரத்துடன் கூறினாள். குசேலர் சுசீலையைப் பார்த்து "சுசீலை, நான் வறுமையால் இறப்பினும் யாரிடமும் கையேந்தி நிற்க மாட்டேன்" என்று கூறினார். இதைக் கேட்ட சுசீலை "நீங்கள் யாரிடமும் கையேந்தி நிற்க வேண்டாம். தங்கள் பள்ளித் தோழனும் ஆருயிர் நண்பனுமான கண்ணனிடம் சென்று உதவி கேட்கலாமே" என்று கூறினாள். "நான் எவ்வாறு அவரிடம் போய் என் வறுமையைக் கூற முடியும்?" என்றார் குசேலர். "சுவாமி! கண்ணபிரான் எமது துயரைக்

கேட்டால் உதவாமல் இருப்பாரா? உற்ற நண்பனிடம் உதவி கேட்பதில் தவறேதுமில்லை" என்று பணிவுடன் கூறினாள்.



குசேலர் தன் மனையாள் கூறுவதில் தவறில்லை என்பதை உணர்ந்தார். குசேலர் சுசீலையை நோக்கிக் "கண்ணனைக் காணச் செல்ல வேண்டும்; வெறுங் கையோடு பெரியோரைப் பார்க்கச் செல்லக்கூடாது. கண்ணனுக்குக் கொடுப்பதற்கு ஏதாவது உண்டா?" என்று கேட்டார். சுசிலை மகிழ்வுடன் வீட்டினுள் சென்று அங்கிருந்த சிறிது அவலை எடுத்துப் பக்குவம் செய்து, பழந்துணியில் முடிந்து தன் கணவரிடம் கொடுத்தாள். குசேலர் அம் முடிச்சை வாங்கித் தனது மடியில் பத்திரமாக வைத்துக் கொண்டார். அவர் துவாரகையை நோக்கிப் புறப்பட்டார்.


குசேலர் காடுமலையெல்லாம் கடந்து சென்றார். காலில் முட்கள் தைத்தன. உடல் களைப்பினால் சோர்ந்தது. எதையும் அவர் பொருட் படுத்தவில்லை. குசேலர் நீண்ட நாட்களாகக் கண்ணனைக் காணவில்லை. எனவே அவரைக் காண வேண்டும் என்ற ஆவலில் உடலில் ஏற்பட்ட காயத்தையும் சோர்வையும் சகித்துக் கொண்டார். கண்ணன் அரசு புரியும் துவாரகை என்னும் மாநகரை அடைந்தார்.

கண்ணன் வாழும் அரண்மனை வாயிலை ஒருவாறு சென்றடைந்தார். வாயிற் காவலர்கள் குசேலரை உள்ளே விடவில்லை. அவரின் ஏழ்மையான தோற்றத்தைக் கண்டு அவரைப் 'பித்தன்' என நினைத்தனர். ஆனால் குசேலர் வாயிற் காவலரிடம் "எனது பெயர் குசேலர். யான் அவந்தி என்னும் ஊரிலிருந்து வருகிறேன். கண்ணன் எனது பள்ளித்தோழன்" என்று பணிவுடன் கூறினார். குசேலரின் பணிவைக் கண்ட வாயிற் காவலர் மனமிரங்கினர். அவர்கள் கண்ணனிடம் சென்று "அரசே, வணக்கம், அரண்மனை வாயிலில் தங்களின் நண்பர் என்று கூறிக்கொண்டு ஒருவர் நிற்கிறார். அவர் தன் பெயரைக் குசேலர் என்று கூறுகிறார்" என்றனர்.



இதைக் கேட்ட கண்ணன் மிகவும் மகிழ்ந்து, "விரைந்து சென்று அவரை அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டார். ஏவலாளர்கள் ஓடோடிச் சென்று, குசேலரை அழைத்து வந்தனர். குசேலர் வருவதைக் கண்ட கண்ணன் ஓடிச் சென்று அவரை மார்போடு அணைத்துக் கொண்டார். கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. குசேலரை அழைத்துச் சென்று, நீராடச் செய்து புதிய பட்டாடைகளை அணிவித்து, அறுசுவை உண்டி பரிமாறினார். தமக்களிக்கப்பட்ட அன்பான உபசரணையால் மிகவும்

மகிழ்ச்சியடைந்த குசேலர் தன் நண்பனின் உயர்ந்த குணங்களைக் கண்டு வியந்து போற்றினார். கண்ணன் குசேலரைப் பார்த்து "நண்பா, சுசீலை எனக்கு என்ன கொடுத்து அனுப்பினாள்?" என்று ஆவலுடன் கேட்டார். குசேலர், மனைவி கொடுத்த அவலை எவ்வாறு கொடுப்பது என நினைத்தார். கண்ணன் குசேலர் அணிந்து வந்த ஆடைகளை எடுத்தார். அதில் இருந்த முடிச்சை அவிழ்த்தார். ஒரு பிடி அவலை எடுத்து ஆவலோடு உண்டார். "ஆகா! என்ன சுவை" என்று வியந்தார். இதைக் கண்ட குசேலர் கண்ணனை அன்பொழுகப் பார்த்தார்.



குசேலர் தான் உதவி கேட்டு வந்த விடயத்தைக் கண்ணனிடம் கூறவில்லை. நண்பனிடம் விடைபெற்றுக் கொண்டு தம் ஊரை வந்தடைந்தார். அங்கு கண்ட காட்சிகளால் திகைப்புற்றார். குடிசைகள் இருந்த இடங்களே தெரியவில்லை. குடிசைகள் எல்லாம் மாடமாளிகைகளாகத் தோற்றமளித்தன. தமது வீட்டை நோக்கி நடந்தார். என்ன ஆச்சரியம்! அவரது குடிசையும் மாடமாளிகையாயிருந்தது. குசேலரின் குழந்தைச் செல்வங்கள் மிகவும் ஆனந்தத்தோடு விளையாடிக் கொண்டிருந்தன.

இந்த அற்புத நிகழ்ச்சியைக் கண்ட குசேலர் இவை யாவும் கண்ணனின் கருணையினாலேயே நடந்தன என்பதை உணர்ந்தார். உள்ளம் உருகினார். தங்கள் துயர் துடைத்த கண்ணனை வாயாரப் புகழ்ந்தார்

"பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ?"

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) அவந்தி என்னும் ஊரில் வாழ்ந்த முனிவர் யார்? அவரது மனைவியின் பெயர் யாது?
(2) குசேலர் என்ற பெயர் அவருக்கு எதனால் ஏற்பட்டது?
(3) குசேலர் கண்ணனிடம் ஏன் சென்றார்?
(4) அவர் கண்ணபிரானுக்குக் கொண்டு சென்றது யாது?
(5) கண்ணனால் நிகழ்த்தப்பட்ட அற்புதங்கள் யாவை?

## செயற்பாடு

* கண்ணனின் அற்புதங்களை விளக்கும் வேறு கதைகளை ஆசிரியரிடம் அல்லது பெற்றோரிடம் கேட்டு அறியுங்கள்.

* வசதி குறைந்த மாணவருக்கு எவ்வாறு உதவி செய்யலாம் என்பது பற்றி வகுப்பில் கலந்துரையாடுங்கள்.

# செய்ந்நன்றி அறிதல்



ஒருவர் செய்த உதவியை, உதவி பெற்றவர் உயிருள்ளவரை மறத்தல் ஆகாது. உதவி சிறிதாக இருந்தாலும் அதனைப் பெரிதாக மதித்தல் உயர்ந்த பண்பாகும்.

**"காலத்தினாற் செய்த நன்றி சிறிதேனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது"**

என்கிறார் திருவள்ளுவர். ஒருவர் தாகத்தால் தவிக்கும்போது அவருக்கு எவ்வளவு பொன்னைக் கொடுத்தாலும் தாகம் தணியப் போவதில்லை. தாகந் தணிவதற்குச் சிறிதளவு நீரைக் கொடுத்தாலே போதுமானது. அவ்வேளையில் அச்சிறிதளவு நீரின் பெறுமானம் பொன்னின் பெறுமானத்தை விடப் பெரியதாகும்.

மனிதர்கள் யாவருமே பிறரில் தங்கி வாழ்பவர்களாகவும் அதேவேளை பிறரைத் தாங்கி வாழவேண்டியவர்களாகவும் உள்ளனர். இதனால் ஒருவருக்கொருவர் உதவுவது தவிர்க்க முடியாததாகிறது. இதனாலேயே சைவமக்கள் அன்று முதல் இன்று வரை செய்ந்நன்றி எனும் நற்பண்பைப் பொன் போல் போற்றி வருகின்றனர்.

செய்ந்நன்றி மறத்தலால் ஏற்படும் தீயவிளைவுகளைக் கந்தபுராணம் அழகாக எடுத்துக் காட்டுகிறது. அசுரர்களான சூரபன்மனும் அவனது தம்பிமார்களும் சிவபெருமானிடம் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுக காலம் ஆட்சி புரியவும் அரச போகங்களைத் துய்க்கவும் வரங்களைப் பெற்றனர். எவராலுந் தம்மை அழிக்க முடியாத வச்சிரயாக்கையையும் பெற்றனர். பல்வேறு ஆற்றல்களையும் பெற்றுத் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினர். காலப்போக்கில் மிதமிஞ்சிய செருக்கும் அடைந்தனர். சிவபெருமான் செய்த பேருதவியை மறந்தனர். ஆணவத்தின் வடிவமாக மாறினர்.



இறுமாப்புக் கொண்ட இவர்கள் நல்லவர்களை வருத்தினர். தேவர்களும் முனிவர்களும் தம்மை அசுரர்களிடமிருந்து காப்பாற்றுமாறு சிவபெருமானை வேண்டினர். சிவபெருமான் தேவர்களைக் காக்கத் திருவுளங் கொண்டார். இதன் பொருட்டு முருகப்பெருமானைத் தோற்றுவித்தார். சூரபன்மனுக்கும் முருகப்பெருமானுக்கும் இடையே போர் நிகழ்ந்தது. போரில் சூரபன்மன் அனைத்தையும் இழந்தான். இக் கந்தபுராணக் கதை சூரன் செய்ந்நன்றி மறந்ததினால் அடைந்த பெருங்கேட்டினை எடுத்து விளக்குகிறது.

இப்பூவுலகத்தையும், உயிரினங்களையும் படைத்துக் காத்து அருள் செய்து வரும் இறைவனுக்கு யாவரும் நன்றியுடையவர்களாக இருத்தல் வேண்டும். சைவநெறியில் நின்று நற்பண்புகள், நல்லொழுக்கம் பேணி வாழ்வதே இறைவனுக்குச் செய்யும் நன்றியாகும்.

தாய் தந்தையர் கைம்மாறு கருதாமல் எவ்வளவோ நலன்களைத் தம் பிள்ளைகளுக்குச் செய்கின்றனர். அதனாலேயே அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்களாகப் போற்றப்படுகின்றனர். அவர்கள் சொற் கேட்டு அவர்களுக்குப் பணிந்து உதவிகள் செய்வதே பிள்ளைகள் அவர்களுக்குச் செலுத்தும் நன்றிக்கடனாகும்.

கல்வியை வழங்கி அறிவுக் கண்ணைத் திறக்க உதவுபவர் ஆசிரியர். அவரை மதித்து மரியாதை செய்தல் மாணவரின் கடனாகும்.

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு"
>
> - திருக்குறள்

**"நன்றி மறப்பது நன்று அன்று"**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) எதனை வள்ளுவர் ஞாலத்திலும் மிகப் பெரியது எனக் கூறுகிறார்?
(2) சூரபன்மன் இறைவனிடம் பெற்ற வரங்கள் யாவை?
(3) செய்ந்நன்றி மறந்தமையால், சூரபன்மனுக்கு ஏற்பட்ட கதி யாது?
(4) கர்வங் கொண்ட சூரபன்மன் யாரை வருத்தினான்?
(5) முருகப்பெருமான் ஏன் தோற்றுவிக்கப்பட்டார்?
(6) நாம் இறைவனுக்கு ஆற்ற வேண்டிய செய்ந்நன்றி யாது?
(7) நாம் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய செய்ந்நன்றி யாது?

## செயற்பாடு

* பெற்றோர் உங்களுக்காக என்னென்ன உதவிகளைச் செய்கின்றார்கள் என்பதை இனங்கண்டு அட்டவணைப்படுத்தி எழுதுங்கள்.

# தோத்திரப் பாடல்கள் - II

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே(று)
ஒன்றுடையானை உமையொரு பாகமுடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சீராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே.

- திருஞானசம்பந்தர்

தேவாரம்

மானினேர்விழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலன் ஈங்கிவ னென்றுநீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய விடங்க ளிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திருவால வாயர னிற்கவே.

- திருஞானசம்பந்தர்

தேவாரம்

அங்கத்துறு நோய்கள் அடி யார் மேல்ஒழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன் னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

- சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

கந்தபுராணம்

ஆறிரு தடந் தோள் வாழ்க
        ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
        குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
        யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
        வாழ்கசீர் அடியார் எல்லாம்.

- கச்சியப்பசிவாச்சாரியார்

இறைசிந்தையுடன் பாடுவோம்.

# ஆறுமுகநாவலர்



சைவசமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் அரும் பெரும் பணியாற்றிய சைவத் தமிழ்ப் பெருமகனார் ஆறுமுகநாவலர் ஆவர். இவர் 1822 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆந் திகதி யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை; தாயார் பெயர் சிவகாமி அம்மையார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் ஆறுமுகம். தமிழ்நாட்டின் புகழ்மிக்க சைவ ஆதீனமாக விளங்கிய திருவாவடுதுறை ஆதீனம் இவரின் சைவத் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி "நாவலர்" பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அன்று முதல் ஆறுமுகநாவலர் என அழைக்கப்படலானார்.

ஆறுமுகநாவலர் வாழ்ந்து பணியாற்றிய காலம், இலங்கையையும், இந்தியாவையும் ஆங்கிலேயர் அரசாட்சி செய்த காலம். மேற்கத்தைய கலாசாரம் ஆங்கிலக்கல்வி முறை, வேற்றுமதச் செல்வாக்கு என்பன அப்பொழுது மக்களிடையே பரவியிருந்தன.

அதேவேளை சைவசமயம், தமிழ்மொழி, சைவமரபுக்கல்வி, சைவத் தமிழ்க் கலாசாரம் என்பன சிறப்பிழந்த நிலையிற் காணப்பட்டன. ஆறுமுகநாவலர் வாழ்ந்த காலச் சூழ்நிலையே சைவசமயத்தையும், தமிழையும் வளர்ப்பதற்கு அவரைத் தூண்டியது. சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக அவர் செய்த தியாகங்கள் அளப்பரியன.

நாவலர் இளமைப் பருவத்திலேயே கல்வி, அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கினார். சிவபக்தி நிறைந்தவராகவும், சைவ ஆசாரசீலங்களை வாழ்க்கையில் இம்மியளவும் தவறவிடாது கடைப்பிடிப்பவராகவும் திகழ்ந்தார். சைவசமயச் சூழலில் சைவப் பிள்ளைகள் கல்வி கற்க வேண்டும் என்பதை உணர்ந்த நாவலர் வண்ணார்பண்ணையிலும், சிதம்பரத்திலும் சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் பாடசாலைகளை நிறுவினார்.

சைவப் பிள்ளைகள் கற்பதற்கு ஏற்ற சமய நூல்களையும், பாடநூல்களையும் எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார். யாழ்ப்பாணத்திலும், சென்னையிலும் அச்சுக்கூடங்களை, வித்தியாபாலன அச்சு இயந்திரசாலை என்னும் பெயரில் நிறுவினார். ஏட்டுச்சுவடிகளாக இருந்த பழைய சைவநூல்கள், தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் சிலவற்றையுந் தாமே பரிசோதித்து அச்சிற் பதிப்பித்து அவற்றை அழியாமற் பாதுகாத்தார்.

சைவசமயத்திற்கும், பண்பாட்டிற்கும் எதிராக அக் காலத்தில் எழுந்த செயற்பாடுகளுக்கெல்லாம் நாவலர் தகுந்த பதில் அளித்தார். சைவத்தை விட்டுப் பிற மதம் புகுந்தோரிற் பலர் சைவசமயத்தின் உண்மையை உணர்ந்து மீண்டும் சைவசமயத்திற்கு வந்ததுடன் அதனை இறுகப் பற்றவும் வழி பிறந்தது. சைவமும், தமிழும் காப்பாற்றப்பட்டன. ஆறுமுகநாவலர் சமயத் தொண்டுடன் கஞ்சித் தொட்டித் தருமம் போன்ற சமூகத் தொண்டுகளிலும் ஈடுபட்டார். வரலாற்றுப் புகழ்மிக்க கீரிமலைச் சிவன்கோயில், திருக்கேதீச்சரம் என்பவற்றின் மூர்த்தி, தல தீர்த்தச் சிறப்புக்களை வெளிப்படுத்தியதுடன், அவற்றின் புனருத்தாரணப் பணிகளுக்கும் முன்னின்று உழைத்தார்.

ஐந்தாங்குரவர் எனப் போற்றப்பட்ட ஆறுமுகநாவலர் 1879 ஆம் ஆண்டு கார்த்திகை மாத மக நட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தார். சைவமும், தமிழும் தமது இரு கண்கள் எனப் போற்றி வாழ்ந்த நாவலர் பெருமான் முத்தியடைந்த தினத்தில் அவர் பொருட்டுக் குருபூசை நடாத்துதல் நம் கடனாகும்.

**அறிஞர்களை என்றும் மறவோம்.**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) ஆறுமுக நாவலரின் தாய் தந்தையரின் பெயர்கள் யாவை?
(2) இவருக்கு நாவலர் எனும் பட்டத்தை வழங்கிய ஆதீனம் எது?
(3) ஆறுமுகநாவலர் உருவாக்கிய சைவவித்தியாசாலைகள் எவை?
(4) ஆறுமுகநாவலர் ஆற்றிய சைவப் பணிகள் மூன்று தருக.
(5) ஆறுமுகநாவலர் இறைவனடி சேர்ந்த தினம் யாது?

## செயற்பாடு

* "குருபூசை" பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.
* ஆறுமுகநாவலரின் குருபூசை தினத்தைப் பாடசாலையில் கொண்டாடுங்கள்.
* அறுமுகநாவலர் சைவ வினாவிடையில் கூறியபடி சைவ அநுஷ்டானங்களைத் தினமும் கடைப்பிடியுங்கள். இது பற்றி ஆசிரியரின் அறிவுரையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# உத்தம வாழ்வு



ஓர் ஊரில் பெருந்தன்மையுள்ள செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் சிவைக்கியர். அவருக்கு ஒரேயொரு புத்திரன் இருந்தான். அதனால் தந்தைக்கு மகன் மீது அதிக பிரியம். அதனால் மகனை அதிகம் கண்டிப்பதில்லை. அச்சிறுவன் துஷ்டப் பிள்ளைகளோடு சேர்ந்ததனால் தீய பழக்கங்களை பழகிவிட்டான். அதனால் சிவைக்கியருக்கு மிக்க மனவருத்தம். சிறுவனுக்குப் பத்து வயது ஆகிவிட்டது. அவனைத் திருத்துவதற்குக் கடவுள் வழிபாடே நல்ல வழியென்று நினைத்துத் தான் கோயிலுக்குப் போகும்போது தன்னுடன் வரவேண்டுமென்று மகனிடம் கூறினார்.





5. S.P.C. - 090275

சிறுவன் ஒன்றும் பேசாமல் நின்றான். அப்போது சிவைக்கியர், "என்ன மகனே, நாங்கள் மிருகங்களா? மிருகங்கள் உணவு தேடுவதிலும், உண்பதிலும், உலாவித் திரிவதிலும், உறங்குவதிலும் காலத்தைப் போக்குவன; நீயும் அவற்றைப் போலத்தான் காலத்தைப் போக்க எண்ணுகின்றாயா? இந்த அருமையான மனிதப் பிறவி நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி, அவரிலே பற்று வைத்து அவரோடு சேருவதற்காகவே; ஆதலால், உத்தமனாக வாழ்ந்து கடவுளை வழிபடல் வேண்டும். தினந்தோறும் காலையிலும் மாலையிலும் பத்து நிமிட நேரமேனும் கடவுள் வழிபாட்டிலே ஈடுபடலாகாதோ? கோயிலுக்குப் போவதுமன்றிக் காலையிலும், மாலையிலும் முகங் கழுவியவுடனே திருநீறு பூசித் தோத்திரஞ் சொல்லிக் கடவுளை வணங்குதல் வேண்டும்" என்றார். சிறுவனும் அரைகுறை மனதோடு சம்மதித்தான்.



மகனின் மனோநிலையைக் கருத்திற் கொண்டு. அவன் கோயிலுக்கு விருப்பத்தோடு போகச் செய்வதற்காக, கோயிற் குருக்களிடத்திலே சிவைக்கியர் இரகசியமாக ஓர் ஒழுங்கினைச் செய்து வைத்தார். அன்று பின்னேரம், சிவைக்கியரும் மகனுங் கோயிலுக்குச் சென்றார்கள். அவர்கள் கும்பிட்டு முடிந்த பின்பு, குருக்கள் அவர்களுக்குத் திருநீறு கொடுத்துச்

சிறுவனிடம் வாழைப்பழமுஞ் சர்க்கரைப் பொங்கலுங் கொடுத்தார். சிறுவன் மிகவுஞ் சந்தோஷப்பட்டுக் கொண்டான். கோயிலிலிருந்து வீட்டுக்குச் செல்லும் வழியிலே தனக்கு ஒவ்வொரு நாளுங் குருக்கள் வாழைப்பழமுஞ் சர்க்கரைப் பொங்கலுங் கொடுப்பாரா என்று தகப்பனாரைக் கேட்டான். அதற்குச் சிவைக்கியர், "நாளைக்கு நாங்கள் கோயிலுக்குப் போகிறபொழுது குருக்கள் தருகிறாரா என்று பார்க்கலாமே" என்றார். அடுத்த நாள், சிறுவன் கோயிலுக்குப் போய்ச் சுவாமியைக் கும்பிட்டு விட்டு நின்றான். குருக்கள் பிரசாதத்தைக் கொடுத்தார். அவன் தனக்கு ஒவ்வொரு நாளும் பிரசாதங் கிடைக்குமென்று எண்ணிக் கோயிலுக்கு ஒழுங்காகப் போனான். கெட்ட சினேகிதர்களின் சகவாசத்தைக் குறைத்து, சிவைக்கியர் மகனை இயன்ற வரையுந் தம்மோடு வைத்துக் கொண்டு அவனை நல்ல பிள்ளை ஆக்கினார்.

பலநாட் சென்ற பின்பு, ஒரு நாட் சிறுவன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து தகப்பனாரைப் பார்த்து, "அப்பா, பிறருடைய பொருளை நாம் அனுபவிப்பது தான் எல்லாச் செய்கைகளிலும் மிக இழிவான செய்கை" என்றான். "இதை உனக்கு யார் சொன்னது?" என்று மகனிடம் சிவைக்கியர் கேட்டார். "இன்று பாடசாலையில் நான் படித்துக் கொண்ட பாடம் இது" என்றான் சிறுவன். "குருக்களிடமிருந்து வாழைப்பழம் வாங்க எனக்குப் பிரியமில்லை" என்று சிறுவன் கூறினான். "மகனே, நீ சொல்லுவது சரிதான். ஆனாலும் பிரசாதம் கிடைக்கவில்லை என்றால் நீ கோயிலுக்குப் போகமாட்டாயே" என்றார். அப்போது மகன், "அப்பா, நான் பிரசாதத்துக் காகவா கோயிலுக்குப் போகிறேன்? தொடக்கத்திலே நான் போனது அதற்காகவுந்தான்; இப்போது அதைப் பற்றி நான் சற்றேனும் நினைக்க வில்லை. கடவுள் எங்கள் எல்லோருக்கும் தாயும் தகப்பனுமாய் இருந்து எங்களிலே மிகுந்த அன்பு வைத்து எங்களைக் காக்கின்றாரல்லாவா? நான் உங்களிலே எவ்வளவு பற்றாக இருக்கிறேன்; அப்படித்தானே கடவுளிலும் பற்றாக இருப்பேன். அவர் அருள் இல்லாவிட்டால் ஒரு நிமிடமாவது நாம் இருக்க முடியுமா? எந்தக் காலத்திலும் எந்தப் பிறவி எடுத்தாலும் அவர் தாமே எம்மைக் காக்கின்றவர். இனிமேல் ஒரு நாளைக்காவது கோயிலுக்குப் போகாமல் இருக்க மாட்டேன்" என்றான்.

சிவைக்கியர் இதைக்கேட்டு மிகவும் மகிழ்வடைந்தார். "மகனே, நீ இப்போது மிகவும் உத்தமமான பிள்ளையாகி விட்டாய். இனி உனக்கு ஒரு குறையுமில்லை" என்று மகனை வாழ்த்தினார்.

சிறுவன் பக்தியும் புத்தியும் உள்ளவனாக வாழ்ந்தான். கடவுளை வணங்கி வந்தால் எந்தத் தீமையும் அணுகாது.

**இறைசிந்தனை நிறைவினைத் தரும்.**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) செல்வந்தரின் பெயர் யாது?
(2) அவருடைய மகன் தீய பழக்கங்கள் பழகக் காரணமென்ன?
(3) உணவு தேடுவதிலும் உண்பதிலும் மட்டும் காலத்தைக் கழிப்பன எவை?
(4) சிறுவன் குருக்களிடமிருந்து வாழைப்பழம் வாங்கப் பிரியமில்லை எனக் கூறியது ஏன்?
(5) சிறுவன் முதலில் எதற்காகக் கோயிலுக்குப் போகத் தொடங்கினான்?
(6) கடவுள் எப்படிப்பட்டவர் என்பதற்குச் சிறுவன் கூறும் கருத்துக்கள் யாவை?

## செயற்பாடு

* வெள்ளிக்கிழமைகளில் பாடசாலையில் அல்லது அயலிலுள்ள கோயிலுக்குச் சென்று பூசையிற் கலந்து கொள்ளுங்கள்.
* "ஆலய வழிபாடு" பற்றி மாணவர் மன்றத்தில் உரை நிகழ்த்துங்கள்.

# பகுத்து உண்ணும் பண்பு

இரந்தி தேவர் என்னும் அரசர் ஒரு நாட்டை ஆண்டு வந்தார். அவர் எல்லா உயிர்களிடத்துங் கருணை உள்ளவர். அதனால், பசியோடு தம்மிடம் வருகிற எவர்க்கும் இல்லை என்று சொல்லாது அவர்களின் பசியைப் போக்கும் பண்பு இரந்திதேவருக்கு இருந்தது. அதற்குக் காரணம் பிற உயிர்களையும் இறைவன் வடிவமாக அவர் காண்பதுதான்.

ஒருமுறை, இரந்திதேவர் தன் பரிவாரங்களுடன் காட்டுக்குப் போய் விரதம் இருந்தார். விரதத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்புவதற்கு அனைவரும் ஆயத்தமாகினர். காலையில் பாரணம் செய்து விரதத்தை நிறைவு செய்த பின்னர், நாடு திரும்ப எண்ணியிருந்தனர். அவர்கள் எஞ்சியிருந்த உணவுப் பொருள்கள் முழுவதையும் பயன்படுத்திக் காலை உணவைத் தயார்ப்படுத்தினர். அவர்கள் உணவருந்த ஆயத்தஞ் செய்யும் பொழுது அவ்விடத்திற்கு ஒருவன் பசியோடு வந்தான். உடனே இரந்தி தேவர் அவனுக்கு வேண்டிய உணவைக் கொடுத்து அவனுடைய பசியைத் தீர்த்து மரியாதை செய்து அவனை அனுப்பினார். பின்பு, மிகுதியாய் இருந்த உணவை எல்லோருக்கும் சமமாகப் பிரித்து ஒரு பங்கைத் தாம் எடுத்துக் கொண்டு மிகுதியை மற்றவர்கள் உண்ணும்படி கொடுத்தார்.

மற்றவர்கள் உணவு உண்டு முடித்த பின்னர், அரசர் தமது பாகத்தை உண்ணத் தொடங்கும் போது, அக்காட்டு வழியே சென்ற வழிப்போக்கன் ஒருவன் மிகுந்த பசியோடு அவ்விடம் வந்து சேர்ந்தான். இதைப் பார்த்த இரந்திதேவர் தமக்கென வைத்திருந்த உணவில் ஒரு பகுதியைக் கொடுத்து அவனுடைய பசியைத் தீர்த்து அனுப்பினார்.

அரசர் எஞ்சிய உணவில் ஒரு பிடியைத் தம்முடைய கையால் எடுத்து வாய்க்குக் கொண்டு போகும் வேளையில், காட்டிலே வேட்டையாடிய ஒருவன் சில நாய்களோடு பசியால் அதிகம் இளைத்துப் போய், அவர் இருக்கும் இடத்துக்கு வந்தான். இரந்திதேவர் ஒரு கொஞ்சத் தண்ணீரை

மாத்திரம் தமக்கென வைத்துக் கொண்டு தம்மிடமுள்ள உணவை அவனுக்கும் நாய்களுக்கும் கொடுத்தார். அவன் நாய்களோடு போய்விட்டான்.

இரந்திதேவர் எஞ்சியிருந்த தண்ணீரைக் குடிப்பதற்கு அண்ணாந்து பாத்திரத்தை உயர்த்துகையில், "ஐயா, தாகம் பொறுக்க முடியவில்லை; கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்" என்று ஒரு சத்தம் அவர் காதில் விழுந்தது. அவர் திரும்பிப் பார்த்தார். ஒரு முதியவர் களைத்துத் தவித்து நிலத்திலே கிடந்து கொண்டு தன்னுடைய முகத்தையும் தண்ணீர்ப் பாத்திரத்தையும் ஆவலோடு பார்க்கக் கண்டார். அம்முதியவரைப் பார்த்த வுடன் மிகவும் பரிதாபங் கொண்டு, அம் முதியவரின் தலையைத் தம்முடைய கையினால் உயர்த்திக் கொண்டு, வரண்டு காய்ந்து போன முதியவரின் வாய்க்குள்ளே தண்ணீரை விட்டார். இரந்திதேவரின் அன்பான வார்த்தைகளே தண்ணீரிலும் பார்க்க அம்முதியவருக்கு அதிகக் குளிர்ச்சியாய் இருந்தன.

அம்முதியவர் தண்ணீரைக் குடிக்கும்போது, இரந்திதேவர் எல்லாம் வல்ல எம்பெருமானை நினைத்து இறைஞ்சினார். "சிவபெருமானே! நான் எனக்காக எந்த வரத்தையும் கேட்கவில்லை; சாயுச்சிய முத்தியையும் விரும்பவில்லை; உலகத்திலே உள்ள சீவராசிகள் எல்லாம் சுகமாக இருக்க வேண்டும்; உலகில் வாழ்பவர்களின் துன்பங்களை நீக்கி, அவ்வான்மாக் களுக்கு ஆறுதல் செய்யத்தக்கதாக எனக்குத் திருவருள் செய்ய வேண்டும். தாகத்தால் வருந்திய இந்த முதியவருக்கு நான் குடிக்க வைத்திருந்த தண்ணீரைக் கொடுத்ததனால் அவருடைய உயிர் பிழைத்தது. என்னுடைய பசி, தாகம் யாவும் நீங்கின. இளைப்பு நீங்கியது. எனக்கு ஆறுதல் உண்டாயிற்று. இதுபோல உயிர்களுக்கு ஆறுதல் செய்ய எனக்குத் திருவருள் செய்ய வேண்டும்" என்று வணங்கி நின்றார்.

**யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) இரந்திதேவரின் சிறந்த பண்புகள் இரண்டு கூறுக.
(2) காட்டிலே இரந்திதேவர் தனக்கென வைத்திருந்த உணவை யார் யாருக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்?
(3) இரந்திதேவர் தான் குடிப்பதற்கென வைத்திருந்த தண்ணீரை யாருக்குக் குடிக்கக் கொடுத்தார்?
(4) இரந்திதேவருடைய பசி எவ்வாறு நீங்கியது?
(5) இரந்திதேவர் இறைவனிடம் வேண்டிய வரம் யாது?
(6) "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" இதன் பொருளைக் கூறுக.

## செயற்பாடு

* உங்கள் பெற்றோரின் அனுசரணையுடன் வசதியான ஒருநாளில் பசியால் வருந்துகின்ற ஒருவருக்கு உணவும் நீரும் வழங்குங்கள்.
* அயலில் ஆதரவற்றோர், தாய்தந்தை இழந்தோர், புலம் பெயர்ந்தோர் வாழும் விடுதிகள் இருப்பின் ஆசிரியரின் துணையுடன் அங்கு சென்று அவர்களுக்கு ஆதரவு நல்கிச் சிறிய அளவிலேனும் உதவுங்கள்.

# 'கற்க; கற்றபடி ஒழுகுக'

உ
சிவமயம்

பழமுதிர்சோலை,
சிவபுரம்.
15.07.2001.

அன்புள்ள மகன் அறிவது,

எல்லாம் வல்ல சிவபெருமான் திருவருளால் நாங்கள் அனைவரும் நலமாக உள்ளோம். நீயும் நல்ல சுகத்துடன் இருக்க இறைவன் அருள் புரிவானாக.

உனது அன்புக் கடிதம் கிடைக்கப் பெற்றோம். வாசித்து மகிழ்ந்தோம். பாடசாலை விடுதியில் நீ மகிழ்ச்சியாக இருப்பதாகக் கடித மூலம் அறிந்த உன் அம்மா, ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளார்.

எங்கள் எல்லோர் மீதும் அன்பைக் கொட்டி எழுதியிருந்த கடிதத்தை வாசிக்க, வாசிக்க எங்களுக்குப் பெரு மகிழ்ச்சியாக உள்ளது. ஆனால் உனது பிரிவு மிகவும் கஷ்டமாகவுள்ளது. உன்னைப் பற்றியே நாங்கள் எப்போதும் கதைத்துக் கொண்டிருப்போம். உனது கல்வி முன்னேற்றத்திற்காக நாங்கள் எதைச் செய்யவும் தயாராகவுள்ளோம். எதற்கும் சிவனுண்டு பயமில்லை என்று திடமாக நம்பி இருப்போம்.

உன்னை ஒரு சைவப் பிள்ளையாக வளர்க்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். நீயும் இதனை அறிவாய். அதற்காகவே நான் எனது கடிதங்களில் சைவசமய ஒழுக்கம் பற்றிச் சில குறிப்புகளை எழுதுவது வழக்கம்.

மகனே, அதிகாலையிலேயே நித்திரை விட்டு எழுந்து விடுதல் வேண்டும். காலைக்கடன்களை நிறைவேற்றியவுடன் நீராடி, திருநீறு பூசி, தேவார பாராயணம் செய்து கடவுளை வணங்கி விட்டே மற்றைய கருமங்களைச் செய்யத் தொடங்குதல் வேண்டும்.

உன் தாயையும் தந்தையையும் எப்படி நேசித்து அன்பு செலுத்துகிறாயோ, அப்படியே உனக்குக் கல்வி போதித்து நல்வழி காட்டும் ஆசிரியர்கள் மீதும் அன்பாயிரு. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது சைவமரபு. கண்கண்ட தெய்வமாக உள்ளவர்களே ஆசிரியர்கள் என்பது நீ அறியாதது அல்ல. குருவை நிந்தித்தல் சிவனை நிந்தித்தல் போன்ற பாவச் செயல் ஆகும். இதனை மறந்து விடாதே.

உன் அக்காவும், தம்பியும் உன் சேமம் விசாரித்ததாய்க் கூறச் சொன்னார்கள். நீ அவர்களுடன் மாறாத அன்பு கொண்டிருப்பது போலவே உன் மாணவ நண்பர்களுடனும் அன்பாயிரு. அவர்களுடன் வன்சொல் பேசுதல், சண்டையிடுதல், கோபித்தல் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்.

பாடசாலையிலே காலைப் பிரார்த்தனைகளிலே தவறாமல் கலந்து கொள். கூட்டுப் பிரார்த்தனை, பஜனை என்பவற்றையும் தவற விட்டு விடாதே. நீ நன்றாகத் தேவார திருமுறைகளைப் பாடுவாய் அல்லவா? சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவற்றைப் பாடத் தவறாதே.

நீ அணியும் ஆடைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்; அவற்றை அடிக்கடி தோய்த்து உலர்த்தி அணிந்து கொள். படுக்கைவிரிப்பு, தலையணை உறை, துவாய் என்பவற்றையும் காற்று, சூரியஒளி படும் இடங்களில் உலரவிட்டுச் சுத்தமாக வைத்திருத்தல் அவசியம் என்பதை மறவாதே.

பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள பிள்ளையார் கோயிலுக்கு வெள்ளிக்கிழமை தோறும் சென்று மாலைப் பூசை ஆராதனைகளிலே



6. S.P.C. - 090275

கலந்து கொள். சைவசமய பாடத்தைக் கற்றால் மட்டும் போதாது. கற்றபடி ஒழுகவும் வேண்டும். மிகுதி விடயங்களை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

இறைவன் துணை
அன்பே சிவம்

இப்படிக்கு,
உன்மீது பாசமுள்ள
அப்பா.

## செயற்பாடு

* நல்ல விடயங்களை அறிவுறுத்தி, உமது நண்பருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்



இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணம் என்னும் நகரம் உள்ளது. யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள ஓர் ஊர் நல்லூர் ஆகும். 'ஆரியச் சக்கரவர்த்திகள்' எனப்படும் அரசர்களின் தலைநகராக நல்லூர் விளங்கியது. ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலத்தில், இவ்வாலயம் கட்டப்பட்டது என்பர். ஆயினும் போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்தில் நல்லூர்க் கோயில் முற்றாக அழிக்கப்பட்டது.

தற்போது உள்ள நல்லூர்க் கந்தசுவாமி கோவில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் ஒரு மடாலயமாக ஆரம்பிக்கப்பட்டதொன்றாகும். காலப்போக்கில் முருகன் திருவருளால் வளர்ச்சி பெற்று இன்று இரண்டு கோபுரங்களுடனும் நான்கு மணிக்கூட்டுக் கோபுரங்களுடனும் காட்சியளிக்கின்றது. தெற்குப் புறவீதிக்குத் தென்புறமாக அழகிய தீர்த்தக்கேணி உள்ளது. அத்தீர்த்தக் கேணியின் பக்கத்தில் தண்டாயுதபாணி கோவிலும் உள்ளது. அகலமான வெளிவீதிகள் நாலாபுறமும் அமைந்து கோயிலை அழகுபடுத்துகின்றன.

கோயிலைச் சுற்றிவரப் பல மடங்கள் இருக்கின்றன. அவற்றுள் தேர்முட்டிக்கு அண்மையில் உள்ள அறுபத்துமூவர் குருபூசை மடம் முக்கியமானது. இது சடையம்மா மடம் எனவும் அழைக்கப்படுகிறது.

நல்லூர்க் கோயிலின் முக்கிய சிறப்பு நாள்தோறும் ஆறுகாலப் பூசைகளும் நேரம் தவறாது குறித்தபடி நடைபெறுதல் ஆகும். மாதந்தோறும் கார்த்திகை உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதப் பிறப்பன்றும் திருவனந்தற் பூசைக்கு முன்னதாக பூந்தோட்டத் திருமஞ்சனக் கிணற்றில் தீர்த்தம் நடைபெறுவது இவ்வாலய வழக்கம்.



இவ்வாலயக் கொடியேற்றத் திருவிழா இருபத்தைந்து நாள்கள் நடைபெறும். இம் மஹோற்சவக் காலத்தில் கொடியேற்றம், மஞ்சம், சப்பறம், தேர், தீர்த்தம் என்பன மிகச் சிறப்பானவையாகும். இத் திருவிழாக் காலத்தில் பெருந்தொகையான அடியார்கள் வருகை தருவதால் அவர்களின் நன்மைக்காக ஆலய வீதிகளில் பந்தல்கள் அமைக்கப்பட்டிருக்கும். சித்திரத் தேரிலே ஆறுமுகப் பெருமான் பவனி வரும் காட்சியைக் காண்பதற்கும், வழிபடுவதற்கும் இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வந்து சேருவர். தீர்த்த உற்சவம் ஆவணி மாத அமாவாசையில்

இடம்பெறும். அப்போது விநாயகர், முருகன், வள்ளி, தெய்வயானை, சண்டேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகளும் பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். தீர்த்த உற்சவத்திற்கு மறுநாள் பூங்காவன உற்சவம் நடைபெறும். நல்லைக் கந்தனின் அருள் நம் அனைவரது வாழ்வையும் வளமாக்கும்.

**பன்னிரு தடந்தோள் வள்ளல்பாத பங்கயங்கள் போற்றி**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தோர் யார்?
(2) நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் எத்தனை வாயிற் கோபுரங்களும், எத்தனை மணிக்கூட்டுக் கோபுரங்களும் உண்டு?
(3) நல்லூர்க்கந்தசுவாமி கோயிலில் கொடியேற்றத்துடனான உற்சவங்கள் எவை? அவை எத்தனை நாட்கள் நடைபெறும்?
(4) தீர்த்தோற்சவத்தில் பவனி வரும் பஞ்சமூர்த்திகளும் எவை?
(5) தீர்த்தோற்சவத்திற்கு அடுத்த நாள் நடைபெறும் உற்சவம் யாது?

## செயற்பாடு

* இலங்கையிலுள்ள சிறப்புப் பெற்ற முருகன் ஆலயங்களின் வர்ணப் படங்களின் பிரதிகளைச் சேகரித்து ஒரு படப்புத்தகம் தயாரிக்குக.

# தடாதகைப் பிராட்டியார்



பாண்டிய நாட்டை மலையத்துவசன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் மனைவி காஞ்சனமாலை. இருவரும் சிவபக்தியில் சிறந்தவர்கள். இவ்விருவருக்கும் சகல செல்வங்கள் இருந்தும் குழந்தைச் செல்வம் இல்லாதது பெரும் குறையாக இருந்தது. இதனால் மலையத்துவச மன்னன் சிவபெருமானிடம் குழந்தை வரம் வேண்டி யாகம் செய்தான். அந்த யாகத்தீயிலே உமாதேவியார் அழகிய பெண் குழந்தையாகத் தோன்றினார்.

மலையத்துவச மன்னனும் காஞ்சனமாலையும் அளவில்லா ஆனந்தம் அடைந்தனர். காஞ்சனமாலை அப்பெண் குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். மன்னன் அக்குழந்தைக்குத் தடாதகை என்று பெயரிட்டான். தடாதகைக்கு யானையேற்றம், குதிரையேற்றம், விற்போர், வாட்போர் முதலான அரசகுமாரருக்கு உரிய பயிற்சிகளைப் பயிற்றுவித்தான்.



மலையத்துவச பாண்டியன் தடாதகைக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தான். நாட்டை ஆளும் பொறுப்பைத் தடாதகை ஏற்றார். வயது முதிர்ச்சி காரணமாக மலையத்துவசன் சிவபதம் அடைந்தான். தடாதகை பல நாட்டு மன்னர்களுடன் போர்புரிந்து பல வெற்றிகளைப் பெற்றார். ஒருமுறை திருக்கைலாயமலையைச் சுற்றித் தடாதகையின் படைகள் அணி வகுத்து நின்றன. அங்கே சிவபெருமான் இடபவாகனத்திற் காட்சியளித்தார். போர்க்கோலம் பூண்டு வந்திருக்கும் தடாதகையைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். நாணமடைந்த தடாதகை தன் படைகளுடன் பாண்டிய நாட்டுக்குத் திரும்பினார்.



சிவபெருமான் சுந்தரபாண்டியராக மதுரைக்கு வந்தார். குறித்த நன்னாளில் தடாதகையைத் திருமணம் செய்தார். காஞ்சனமாலை சிவபெருமானை வணங்கி "சுவாமி தடாதகையைத் திருமணம் புரிந்தது போல் இப்பாண்டிய நாட்டையும் அரசு செய்ய வேண்டும்" என்று பணிவுடன் வணங்கி நின்றாள்.

சிவபெருமான் சுந்தர பாண்டியராகவும், தடாதகை மீனாட்சியாகவும் விளங்கினர். நல்ல அரசாட்சியை எப்படி நடாத்த வேண்டும் என்பதை இவர்கள் இருவரும் நடாத்திக் காட்டினர். மக்கள் இவர்களுடைய ஆட்சியில் பல சிறப்புகளையும் பெற்று மகிழ்ந்தனர்.

**"வேண்டுவோர்க்கு வேண்டுவதை இறைவன் தருவான்"**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) மலையத்துவச மன்னன் ஏன் யாகம் செய்தான்?
(2) யாகத்தீயிலே குழந்தையாகத் தோன்றியது யார்? உமாதேவியார்
(3) மலையத்துவசன் அக்குழந்தைக்கு இட்ட பெயர் யாது? தடாதகை
(4) தடாதகைக்கு இளமைப்பருவத்தில் வழங்கப்பட்ட பயிற்சிகள் யாவை?
(5) சுந்தர பாண்டியனாக மதுரைக்கு வந்தது யார்? சிவபெருமான்
(6) தடாதகை யாரைத் திருமணஞ் செய்தார்? சிவபெருமான்

## செயற்பாடு

* சிவபெருமான் படத்தை வரைந்து அதற்கு வர்ணந் தீட்டுங்கள். படத்தை வரையும்போது சிவனை நினைத்துக் கொள்ளுங்கள்.

# கேதார கௌரி விரதம்



முன்னொரு காலத்தில் பிருங்கி என்னும் பெயருடைய முனிவர் வாழ்ந்து வந்தார். அம்முனிவர் திருக்கைலாயத்திலே சிவபெருமானை வணங்கச் சென்றிருந்தார். அங்கு சிவபெருமானும் பார்வதிதேவியாரும் வீற்றிருந்தனர்.

பிருங்கி முனிவர் சர்வமும் சிவமயம் என்னும் கொள்கையுடையவர். சிவனை மட்டுமே வணங்குபவர். ஆதலால் வண்டு உருவம் எடுத்துப் பரமேஸ்வரரை மாத்திரம் வலம் வந்து வணங்கினார். பார்வதியை அவர் வணங்கவில்லை. இதைக் கண்ட பார்வதிதேவியார் ஆத்திரமடைந்தார். அவர் பிருங்கி முனிவரின் சக்தியை இல்லாமல் செய்து விட்டார். சக்தியை இழந்த முனிவர் நிற்க முடியாமல் தடுமாறினார். அவர் தடுமாறுவதைக் கண்ட சிவபெருமான் அம் முனிவருக்கு ஊன்றுகோல் கொடுத்து அனுப்பினார்.

பார்வதிதேவியார் தான் தனித்து இருந்தமையிலேயே தன்னைப் பிருங்கி முனிவர் வணங்கவில்லை என்பதை உணர்ந்தார். அதனால் கோபத்தோடு பூலோகம் சென்று கௌதம முனிவரின் நந்தவனத்தில் அமர்ந்தார். கௌதம முனிவர் அவரைத் தனது ஆச்சிரமத்தில் இருக்கச் செய்தார்.



பிருங்கி முனிவர் தன்னை வணங்காமல் சென்றதாலேயே தாம் பூலோகம் வந்ததாகப் பார்வதிதேவியார் கூறினார். கௌதம முனிவர் பார்வதிதேவியைப் பார்த்து "அம்மையே எவருமே அனுட்டிக்காத விரதம் ஒன்று உள்ளது. அவ்விரதத்தினைத் தாங்கள் அனுட்டித்தால் இறைவனுடன் சேர்ந்து இருக்கலாம்" என்று கூறினார்.

கௌதம முனிவரின் ஆலோசனையைக் கேட்ட பார்வதிதேவி கேதார விரதத்தினை அனுட்டித்தார். இதன் பலனாகச் சிவபெருமான் தன்னுடலில் பாதியை அம்மையாருக்குக் கொடுத்தருளினார். சிவன் சக்தியுடன் இணைந்த வடிவமே அர்த்தநாரீஸ்வரர் வடிவமாகும். அம்பிகை கேதார விரதத்தை அனுட்டித்து வரம் பெற்றமையினால் கேதார கௌரி விரதம் என இன்று இவ்விரதம் எல்லோராலும் அனுட்டிக்கப்பட்டு வருகிறது. இவ் விரதமானது புரட்டாதி மாதம், பூர்வ பக்க அட்டமியில் ஆரம்பித்து ஐப்பசி மாதத்து அபர பக்கச் சதுர்த்தசியில் நிறைவு பெறுகின்றது. இவ்விரதம் இருபத்தொரு நாட்கள் அனுட்டிக்கப்படும். இருபத்தொரு நாட்களும் அனுட்டிக்க இயலாதவர்கள் கடைசித் தினத்திலாவது விரதத்தினை அனுட்டிக்கலாம்.

விரதம் அனுட்டிப்போர் ஒவ்வொரு நாளும் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவர். விரதத்தின் முதல்நாள் அன்று இருபத்தோரிழைகள் கொண்ட நூற்கயிற்றில் மஞ்சள் பூசி முதல் முடிச்சை இட்டு பூசையில் வைப்பர். அதனைத் தொடர்ந்து விரதநாட்கள் முடியும் வரை ஒவ்வொரு நாளும் ஒரு முடிச்சிடுவர். அதேவேளை பழம், பாக்கு, வெற்றிலை, அதிரசம், மஞ்சள் ஆகியவற்றில் ஒவ்வொன்றை வைத்து இருபத்தொரு நாட்களும் வழிபடுவர். பூசையில் வைத்த இந்த நோன்பு நூற்கயிற்றை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் இருபத்தொராவது நாள் தரித்துக் கொள்வர்.

இருபத்தொரு நாட்களும் விரதம் அனுட்டிப்பவர்கள் முதல் இருபது நாட்களும் சூரிய அஸ்தமனத்தின் பின்னர் ஒரு நேர உணவை மட்டும் உட்கொள்வர். இறுதி நாளாகிய சதுர்த்தசியில் உபவாசம் இருந்து மறுநாள் அதிகாலையில் பாறணை பண்ணுவர்.

இவ்விரதத்தினை முறைப்படி அனுட்டித்தால் இறையருள் பெற்று இன்பம் அடையலாம்.

**வல்லமை தந்திடுவாள் பராசக்தி**
**வாழி என்றே துதிப்போம்.**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) பார்வதிதேவியார் பிருங்கி முனிவரின் சக்தியை ஏன் இல்லாமற் செய்தார்?
(2) கேதார கௌரி விரதத்தை அனுட்டிக்கும்படி பார்வதிதேவியாருக்கு ஆலோசனை கூறியவர் யார்?
(3) கேதார விரதத்தினை அனுட்டித்தமையால் பார்வதிதேவியார் அடைந்த பேறு யாது?
(4) அர்த்தநாரீஸ்வரர் என்பதன் பொருள் யாது?
(5) கேதார கௌரி விரதம் எத்தனை நாட்கள் அனுட்டிக்கப்படுகிறது?
(6) கேதார கௌரி விரதம் எந்த மாதத்தில் என்ன திதியில் ஆரம்பிக்கப்படுகிறது?
(7) கேதார கௌரி விரதத்தின் இறுதிநாளில் கையில் கட்டும் நூற்கயிறு எத்தனை இழைகளைக் கொண்டது? எத்தனை முடிச்சுக்களைக் கொண்டது?

## செயற்பாடு

* விரதம் அனுட்டிப்போருக்கு உதவியாக நீங்கள் செய்யக்கூடியவற்றைப் பட்டியற்படுத்துங்கள்.

# நல்ல பழக்கங்கள்



**சகுந்தலா:-** சாந்தி இன்று காலை எத்தனை மணிக்கு எழும்பினாய்?

**சாந்தி:-** இன்று என்னால் எழும்பவே முடியவில்லை. ஏழு மணியளவில் எழும்பி அவசர அவசரமாகப் புறப்பட்டுப் பாடசாலைக்கு வந்தேன்.

**சகுந்தலா:-** சூரியன் உதிப்பதற்கு முன்னர் துயிலெழுவது சிறந்த பழக்கமாகும். பறவைகள் அதிகாலையில் எழுந்து ஓசை எழுப்புவதை நீ அவதானிக்கவில்லையா?

**சாந்தி:-** ஆம், மனிதர்கள் ஆகிய நாம் சோம்பல் மிகுந்தவர்களாகி விட்டோம். ஆனால் பறவைகள், விலங்குகள் அவ்வாறு இல்லை.

**சகுந்தலா:-** இரவில் உறங்கிய பின்னர், அதிகாலையில் எழுந்தால் மனம் தெளிவாக இருக்கும். ஆகையால் அதிகாலையில் எழுந்து படிப்பதும் நல்லவற்றைச் சிந்திப்பதும் நாம் நாள்தோறும் செய்ய வேண்டிய கருமங்களாகும்.



**சாந்தி:-** ஆம் சகுந்தலா, இது பற்றி எனது அப்பாவும் சொல்லுவார். முனிவர்கள், யோகிகள் ஆகியோர் அதிகாலையில் எழுந்து இறைவனைத் தியானிப்பது வழக்கமாம்.

**சகுந்தலா:-** முனிவர்கள், யோகிகள் மட்டுமல்ல எல்லோருமே அதிகாலையில் எழுந்து தமது கடமைகளை ஆரம்பிக்க வேண்டும். இந்த நேரத்தில் மனம் ஒருமைப்பட்டு இறைவனைப் பற்றி நினைப்பது எளிதாயிருக்கும். வேறு பணிகளாயினும், காலையில் தொடங்கினால் அவை இனிது நிறைவுறுவதை நாம் காண்கிறோம்.

**சாந்தி:-** நீ சொல்வது சரிதான். மாலையில் மனனஞ் செய்ய முடியாத எத்தனையோ விடயங்களைக் காலையிலே எளிதாக மனனஞ் செய்திருக்கிறேன்.

**சகுந்தலா:-** மார்கழி மாதத்தில் வரும் திருவெம்பாவைக் காலத்திலே எல்லோரும் அதிகாலையில் எழுந்து கோயில்களுக்குச் செல்வதும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களையும் திருவெம்பாவைப் பாடல்களையும் பாடுவதும் அவசியம் என எங்கள் முன்னோர் வழக்கப்படுத்தியுள்ளனர்.

சாந்தி:- தத்தங் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற விரும்புபவர்கள் நிச்சயம் அதிகாலையில் எழும்ப வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

சகுந்தலா:- அப்பர் பெருமானும் இந்தப் பழக்கம் பற்றிக் குறிப்பிட்டிருக் கிறார், சாந்தி.

சாந்தி:- அப்படி என்ன சொல்லியிருக்கிறார்?

சகுந்தலா:- "நிலைபெறுமாறு எண்ணுதியேல்...." எனத் தொடங்குந் திருத்தாண்டகம் அதைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளது. "இறைவனுக்கு அதிகாலையிலே தோத்திரம் பாடுங்கள்" என அத் தேவாரம் வற்புறுத்துகிறது.

சாந்தி:- அத் தேவாரத்தை ஒருமுறை ஓதுகிறயா, சகுந்தலா?

சகுந்தலா:- சரி. நான் ஓதுகிறேன். கேள்.

**திருச்சிற்றம்பலம்**

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை யெம் மாதீயென்று
மாரூரா வென்றென்றே யலறாநில்லே

- திருநாவுக்கரசர்

**திருச்சிற்றம்பலம்**

**"என் பழுது களைந்து என்னைக் காப்பாய்"**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) அதிகாலையில் ஓசை எழுப்பும் பறவைகள் யாவை?
(2) நாம் அதிகாலையில் நித்திரைவிட்டெழுவதால் அடையக்கூடிய நன்மைகள் யாவை?
(3) அதிகாலையிலெழுந்து தியானத்தில் ஈடுபடுபவர்கள் யார்?
(4) திருவெம்பாவை எந்த மாதத்தில் வருகிறது?
(5) திருவெம்பாவைக் காலத்தில் சிறுவர் சிறுமியர் என்ன செய்ய வேண்டும்?
(6) நாம் பாடல்களை மனனஞ் செய்வதற்கு உகந்த நேரம் எது?

## செயற்பாடு

* காலையில் ஒலியெழுப்பும் பறவைகளை அவதானியுங்கள். அவற்றின் பெயர்களையும், அவற்றின் வாழ்விடங்கள் பற்றியும் வளர்ந்தோரிடம் கேட்டறியுங்கள்.

* மார்கழி மாதத்தில் திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி, தோத்திரப் பாடல்களைப் பாடுவோர் குழுவில் சேர்ந்து பாடுங்கள்.

# பஞ்ச புராணம்

## திருச்சிற்றம்பலம்
## தேவாரம்

சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த் தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

- திருநாவுக்கரசர் -

## திருவாசகம்

பால் நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக் கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

- மாணிக்கவாசகர் -



7. S.P.C. - 090275

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

– திருமாளிகைத்தேவர்

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனு ந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள்
திசையனைத் தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே.

– சேந்தனார்

## பெரியபுராணம்

சிவனடியே சிந்திக்குந் திருப் பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கில் ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

– சேக்கிழார்

திருச்சிற்றம்பலம்

இசைக்கு மயங்காதார் உண்டோ?

# குமரகுருபர சுவாமிகள்

தென்னிந்தியாவிலே திருநெல்வேலி மாவட்டம் உள்ளது. அங்கு உள்ள புண்ணியத் தலங்களுள் 'ஸ்ரீவைகுண்டம்' என்பதும் ஒன்றாகும். பொருநை ஆற்றின் வட கரையில் உள்ள அவ்வூரிலே சண்முகசிகாமணிக் கவிராயரும் அவர் மனைவி சிவகாமசுந்தரி அம்மையாரும் வசித்து வந்தனர். அவர்கள் நல்லொழுக்கமுந் தெய்வ பக்தியும் நிரம்பப் பெற்றவர்கள். அவர்கள் கலியுக வரதன் ஆகிய முருகப் பெருமானை வழிபட்டு வந்தனர்.



ஒரு நன்னாளில் அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. குலதெய்வமான முருகன் அருளாற் பிறந்த தங்கள் குழந்தைக்கு குமரகுருபரன் என்று பெயர் சூட்டினர். பார்த்தவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகுடன் குமரகுருபரன் வளர்ந்து வந்தான். ஐந்து வயதாகி விட்டது. பெற்றோர் அவனுக்குப் பேசக் கற்றுக் கொடுத்த முயற்சிகள் எதுவும் பயன்தரவில்லை. குமரகுருபரன் வாய் பேச முடியாமல் இருப்பதைப் பார்த்த பெற்றோர் வருந்தித் துடித்தனர்.



"எமது குழந்தை குமரகுருபரன் முருகப்பெருமான் எமக்குக் கொடுத்த வரம்; முருகப்பெருமான்தான் குழந்தைக்குப் பேசும் ஆற்றலைத் தரமுடியும். அவனிடமே சென்று முறையிடுவோம்" என்று பெற்றோர் முடிவு செய்தனர். குழந்தையை அழைத்துக் கொண்டு ஸ்ரீவைகுண்டத்திலிருந்து இருபது மைல் தொலைவில் உள்ள திருச்செந்தூர் முருகன் ஆலயத்திற்குச் சென்றனர். முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளுள் ஒன்றான திருச்செந்தூரில் அலை கடற்கரையில் அழகன் முருகன் ஆலயமாகக் காட்சி தருகிறது. அதனால் திருச்செந்தூர் திருச்சீரலைவாய் என்றும் அழைக்கப்படுகிறது. அவ்வாலயத்தில், தம் குழந்தை வாய் திறந்து பேசுவதற்காக விரதம் இருந்தனர்.

பல நாட்கள் விரதம் இருந்து முருகனை வேண்டிக் கொண்டதன் பலன் ஒரு நாள் தெரிந்தது. குமரகுருபரன் வாய் திறந்து ஏதோ பேச முற்பட்டது போலத் தோன்றியது. குமரகுருபரன் சில சொற்களை ஒலித்தான்.

அடுத்த நொடியில் அவன் கார்மேகம் பொழிவது போலக் கவிமழை பொழியத் தொடங்கினான். முருகப் பெருமானின் அருளைப் போற்றும் அற்புதப் பாடல்கள் ஒன்றன் பின் ஒன்றாய் குமரகுருபரன் வாயிலிருந்து புரண்டு ஓடி வந்தன. தேனினும் இனிய தமிழில் அவர் பாடிய அப்பாடல்கள் 'கந்தர் கலி வெண்பா' எனப்படும். அதுவே குமரகுருபரரின் முதல் நூலாகும். முருகனின் 'சரவணபவ' என்ற ஆறெழுத்து மந்திரத்தின் மகிமையையும், முருகனின் அழகையும் அவர் அந்நூலிற் சிறப்பாகப் பாடியுள்ளார்.

"குமரா, உன் கருணை இருந்தால், பேச்சுத்திறன் மட்டுமல்ல, பெருங் கவிஞனாயும் மலர முடியும் என்பதைக் காட்டி விட்டாய். உன் அருளே அருள்!" என்று கவிராயரும் அவர் மனைவியும் உள்ளம் நெகிழ்ந்து நன்றி கூறி வணங்கினர். பின்னர், மூவரும் தங்கள் ஊர் திரும்பினர்.

இளமைப் பருவத்தை எட்டியபோது, பெற்றோரின் அனுமதியோடு தல யாத்திரைக்குக் குமரகுருபரர் புறப்பட்டார். இளமைக் காலத்திலேயே துறவறத்தை மேற்கொண்டார். 'குமரகுருபர சுவாமிகள்' என்று போற்றப்பட்டார்.

குமரகுருபரசுவாமிகள் மதுரை நகருக்கு வந்து சேர்ந்தார். அங்குள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தை அடைந்தார். அம்பாளின் சந்நிதியில் நின்றபோது, அவர் உள்ளத்திலே பேரானந்த வெள்ளம் பெருகியது. அந்த அனுபவத்தின் காரணமாக 'மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்' என்ற ஒப்பில்லாத பக்திநூல் வெளிப்பட்டது. அக்காலத்தில் மதுரையைத் திருமலை நாயக்கர் என்ற மன்னன் அரசாண்டு வந்தான். குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்ப் பிரபந்த அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு திருமலை நாயக்கருக்குக் கனவிலே பணிப்புரை விடுக்கப்பட்டது.

மீனாட்சி அம்மன் கோயில் ஆயிரங்கால் மண்டபத்திலேயே நூலின் அரங்கேற்றத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புலவர்கள், அறிஞர்கள், பொதுமக்கள் எனப் பலருந் திரண்டிருந்தனர். குமரகுருபரர் சகல



மரியாதைகளுடனும் அரங்கிற்கு அழைத்து வரப்பட்டார். முதலில் மீனாட்சி அம்மையை வணங்கி விட்டுத் தமக்கு இடப்பட்ட மேடையில் அமர்ந்தார். 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின்' அரங்கேற்றம் தொடங்கியது. குமரகுருபரர் ஒவ்வொரு பாடலையும் படித்துப் பொருள் கூறும் நேர்த்தியை அனைவரும் அமைதியாகக் கேட்டிருந்தனர்.



அப்போது அங்கே ஒரு சிறுமி நுழைந்தாள். அவள் அக்கோயில் அர்ச்சகரின் மகள் போலக் காணப்பட்டாள். அவள் நேராகச் சென்று மிகுந்த உரிமையோடு மன்னன் மடியில் அமர்ந்து கொண்டாள். குமரகுருபரரின் உரையில் அனைவரும் தம்மை மறந்து இருந்தனர். சிறுமி சட்டென்று எழுந்தாள். நாயக்கர் கழுத்தில் விளங்கிய முத்துமாலையை உரிமையோடு கழற்றிக் குமரகுருபரருக்கு அணிவித்தாள். அவள் அம்மண்டபத்தை விட்டு மூலஸ்தானத்தை நோக்கி நடக்கையிலே பேரொளி ஒன்று தோன்றி மறைந்தது. தன் மீதான பிள்ளைத் தமிழைத் தன் குழந்தையே பாடக் கேட்டு இன்புறக் குழந்தை வடிவில் வந்தவள் அந்த மீனாட்சி அம்மையே என்பதை உணர்ந்தவுடன் அனைவரும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர்.



வடநாடு சென்ற குமரகுருபரர் வடமொழியறிவைத் தமக்குத் தரும்படி கேட்டு, கலைவாணியின் அருள் வேண்டி ஒரு துதிப்பாமாலை பாடினார். "வெண்டாமரைக் கன்றிநின் பதந் தாங்க" எனத் தொடங்கும் சகலகலா வல்லிமாலை என்ற அப் பிரபந்தத்தைப் பாடி முடித்ததும், வடநாட்டு

மொழியான ஹிந்துஸ்தானி மொழியில் பூரண அறிவைப் பெற்றுக் கொண்டார். வட இந்தியாவிலே மிகப் புனிதமான நதியாக விளங்கும் கங்கைக் கரையில் உள்ள காசி என்னும் தலம் முக்தி தரும் தலமாகும். அங்கு கோயில் கொண்ட சிவபெருமானை விசுவநாதர் என்று மக்கள் வழிபடுவது உண்டு. அத்தலத்திலே அக்காலத்தில் 'குமாரசுவாமி மடம்' என்ற பெயரில் குமரகுருபரர் ஒரு மடத்தை நிறுவினார். அங்கிருந்து சைவசமயச் சொற்பொழிவாற்றிச் சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். இன்றும், அம்மடம் அப்பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது.

**"மொழிக்குத் துணை முருகா வெனும் நாமம்"**

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

(1) குமரகுருபரனின் பெற்றோர் யாவர்?
(2) குமரகுருபரனைப் பெற்றோர் ஏன் திருச்செந்தூருக்கு அழைத்துச் சென்றனர்?
(3) யாருடைய அருளால் குமரகுருபரன் பேசத் தொடங்கினான்?
(4) குமரகுருபரர் முதலில் பாடிய பாடல்கள் தொகுப்பு எது?
(5) முருகனின் ஆறெழுத்து மந்திரம் என்ன?
(6) குமரகுருபரர் இளமைக் காலத்திற் துறவறத்தை மேற்கொண்டதால் எவ்வாறு அழைக்கப்பட்டார்.
(7) குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் எந்தக் கோயிலில் அரங்கேற்றப்பட்டது.
(8) மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் அரங்கேற்றத்தின்போது அங்கு தோன்றிய சிறுமி யார்? அவர் என்ன செய்தார்?
(9) குமரகுருபரர் கலைவாணியைத் துதித்துப் பாடிய பாடல்களின் தொகுப்பு எது?
(10) காசி என்னும் தலத்தில் குமரகுருபரர் நிறுவிய மடத்தின் பெயரென்ன?

## செயற்பாடு

* நவராத்திரி விழாக் காலங்களில் 'சகலகலாவல்லிமாலைப் பாடல்களை இசையோடும் பக்தியோடும் ஓதுங்கள்.

# சைவ சமயப் பண்டிகைகள்



குமார்: ரமேஸ் சைவ சமயத்தவர்கள் அதிகமான பண்டிகைகளைக் கொண்டாடுவதாகக் கேள்விப்படுகிறேன். என்ன, என்ன பண்டிகைகளைக் கொண்டாடுகிறீர்கள் என்று எனக்குக் கூறமுடியுமா?

ரமேஸ்: சைவசமயத்தவர்களாகிய நாங்கள் பல பண்டிகைகளைக் கொண்டாடுகிறோம்.

குமார்: நீங்கள் எந்த எந்தப் பண்டிகைகளைச் சிறப்பாகக் கொண்டாடுகிறீர்கள்.

ரமேஸ்: நாங்கள் தைப்பொங்கல், புது வருடப்பிறப்பு, தீபாவளி, நவராத்திரி ஆகிய பண்டிகைகளை சிறப்பாகக் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு பண்டிகைக்கும், தனித்தனிப் பின்னணிகள் உண்டு.



குமார்: அப்படியா! தைப்பொங்கலை எதற்காகக் கொண்டாடுகிறீர்கள். அன்றைய தினம் நீங்கள் விசேடமாக உண்ணும் உணவு என்ன?

ரமேஸ்: தைப்பொங்கல் உழவர்கள் சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காகக் கொண்டாடுவதாகும். மாரி நீங்கிக் கோடை பிறப்பதை இப் பண்டிகை உணர்த்துகிறது. அதனால்தான் தைபிறந்தால் வழி பிறக்கும் என எமது பெரியோர்கள் கூறுவர். அன்றைய தினம் வீட்டை அலங்கரித்துப் புதுப்பானையில், புத்தரிசியிட்டுச் சர்க்கரைப் பொங்கல் செய்வோம். பின்பு சூரியனுக்குப் படைத்து அனைவரும் உண்டு மகிழ்வோம்.

குமார்: இதை உழவர்கள் தினம் என்றும் கூறலாம் அல்லவா? ஆனால் விவசாயிக்கு உதவும் மாடுகளுக்கு ஏதாவது செய்வதுண்டா?

ரமேஸ்: நல்ல கேள்வி கேட்டாய். தைப்பொங்கலின் அடுத்த நாள் மாடுகளுக்கு என ஒரு கொண்டாட்டத்தை நடாத்துகின்றோம். அது மாட்டுப்பொங்கல் எனப்படும். மாடுகளை நீராட்டிப் பொட்டிட்டு மாலை அணிவித்து பொங்கல், பழம் என்பவற்றை உண்ணக் கொடுப்போம்.

குமார்: கேட்கவே மகிழ்ச்சியாக உள்ளது. அப்படியானால் புதுவருடத்தையும் இப்படிக் குதூகலமாக நீங்கள் கொண்டாடு வீர்களா?

ரமேஸ்: எல்லாச் சமயத்தவர்களும் புதுவருடத்தைக் கொண்டாடுகிறார் கள்தானே! அதைப்போன்றே நாமும் எமது புதுவருடத்தைச் சித்திரை மாதம் முதலாம் திகதி கொண்டாடுகிறோம்.

குமார்: அன்றைய தினம் என்னென்ன விடயங்களை விசேடமாகச் செய்கிறீர்கள்.

ரமேஸ்: அன்றைய தினம் அதிகாலையில் எழுந்து மருத்து நீர் தேய்த்து நீராடுவோம். புத்தாடை அணிந்து பெரியோர்களின் ஆசி பெறுவோம். விதவிதமான தின்பண்டங்களை உண்ணுவோம். கைவிசேடம் பெறுவோம். கோயிலுக்குச் சென்று வழிபடுவோம். உறவினர்களின் வீட்டுக்கு விருந்தினர்களாகச் செல்வோம். வீட்டுக்கு வரும் விருந்தினர்களை வரவேற்போம்.

குமார்: நாங்களும் அப்படித்தான் கொண்டாடுகிறோம். புது வருடத்தை யொட்டி நாங்கள் பல போட்டி நிகழ்ச்சிகளை நடாத்துவது வழக்கம்.

ரமேஸ்: நாங்களும் அப்படியேதான். பல போட்டி நிகழ்ச்சிகளிலும் கலை நிகழ்ச்சிகளிலும் ஈடுபடுகின்றோம்.

குமார்: தீபாவளியை எதற்காகக் கொண்டாடுகிறீர்கள்.

ரமேஸ்: தீபாவளியா? அது மகாவிஷ்ணு நரகாசுரனை அழித்து மக்களின் துன்பங்களை நீக்கிய தினம். அதன் நினைவாகவே நாம் தீபாவளியைக் கொண்டாடுகிறோம்.

குமார்: நல்லது ரமேஸ். சைவ சமயக் கொண்டாட்டங்களின் அடிப்படையான சில தகவல்களை நான் அறிந்து கொள்ள உதவியமைக்காக நன்றி கூறுகிறேன்.

**எமது பண்பாடுகளைப் பாதுகாப்போம்.**

## பயிற்சி

சுருக்கமான விடை எழுதுங்கள்.

(1) தைப்பொங்கல் எதற்காகக் கொண்டாடப்படுகிறது?
(2) மாட்டுப்பொங்கல் என்றால் என்ன?
(3) புதுவருடத் தினத்தன்று மேற்கொள்ளும் சில கருமங்கள் கூறுக.
(4) தீபாவளி எதனை நினைவு கூருமுகமாகக் கொண்டாடப்படுகிறது?
(5) சைவ சமயத்தவர்கள் கொண்டாடும் பண்டிகைகளைக் கூறுக.

## செயற்பாடு

* ஏதாவதொரு கொண்டாட்டத்திற்கு உங்கள் நண்பர்களை உங்கள் வீட்டிற்கு அழைத்து விருந்துபசாரம் செய்யுங்கள்.

* ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் வகுப்பறையில் ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து ஏதாவது ஒரு பண்டிகையை முறைப்படி கொண்டாடுங்கள்.

# நன்னெறி

கடவுள் வாழ்த்து

மின்னெறி சடாமுடி விநாயகனடி தொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

**பதவுரை:-** மின் எறி - மின்னல் போலும் ஒளியை வீசுகின்ற, சடாமுடி - சடை முடியையுடைய, விநாயகன் அடி தொழ- விநாயகக் கடவுளின் திருவடிகளை வணங்குதலால், நன்னெறி வெண்பா நாற்பதும் வரும்- நன்னெறி என்னும் நூலின் நாற்பது வெண்பாவும் வரும்.
ஏ - ஈற்றசை.

(1) பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம் - பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

**பதவுரை:-** பிறர்க்கு உதவி செய்யார் - பிறருக்கு உபகாரஞ் செய்யாத, கருங்கடல் நீர் - கரிய கடலின் நீரை, புயல் சென்று முகந்து - மேகமானது போய் மொண்டு வந்து, பிறர்க்குப் பெய்யாக் கொடுக்கும் - பிறருக்குப் பெய்து கொடுக்கும். (அதுபோல) பிறர்க்கு உதவி செய்யார் பெருஞ் செல்வம் - பிறருக்கு உபகாரஞ் செய்யாதவருடைய பெரிய செல்வமானது, வேறு - பிறதேயாயினும், பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேறு ஆம் - பிறருக்கு உபகாரஞ் செய்பவருடைய செல்வமாகும்.

(2) உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளந்
தடுத்தலரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தலரிதோ? விளம்பு.

**பதவுரை:–** உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் – மனத்தைத் தன்வயத்த தாக்கிக் கொண்டு எழுந்து வளர்கின்ற கோபத்தை காத்துக் கொள்ளும் குணமே குணம் என்க – அடக்கிக் கொள்ளுகின்ற குணமே அருமையாகிய குணம் என்று அறியக் கடவாய். வெள்ளம் தடுத்தல் அரிதோ – (பெருகி வருகின்ற) வெள்ளத்தை (க் கரைகட்டி)த் தடுத்தல் அரியதோ, தடம் கரை பேர்த்து விடுத்தல் அரிதோ – முன் கட்டப்பட்டிருந்த பெரிய கரையை உடைத்து (அதனுள் அடங்கியிருந்த வெள்ளத்தைப் புறத்திலே செல்ல) விடுத்தல் அரியதோ, விளம்பு – நீ சொல்வாயாக.
தான் – அசை.

**(3) இன் சொலா லன்றி இருநீர் வியனுலகம்**
**வன் சொலா லென்றும் மகிழாதே – பொன் செய்**
**அதிர் வளையாய்! பொங்காதழற்கதிராற் றண்ணென்**
**கதிர் வரவாற் பொங்குங் கடல்.**

**பதவுரை:–** பொன் செய் அதிர் வளையாய் – பொன்னாலே செய்யப்பட்ட ஒலிக்கின்ற வளையல்களையுடையவளே, கடல் தண்என் கதிர் வரவால் பொங்கும் – கடலானது குளிர்ச்சி பொருந்திய கிரணங்களையுடைய சந்திரன் வருகையினால் பொங்கும். (அதுவன்றி) அழற் கதிரால் பொங்காது – வெம்மை பொருந்திய கிரணங்களையுடைய சூரியன் வருகையினாலே பொங்காது; (அது போல) இரு நீர் வியன் உலகம் – பெரிய கடல் சூழ்ந்த பரந்த உலகத்திலுள்ளவர்கள், இன் சொலால் அன்றி வன் சொலால் என்றும் மகிழாது – இன்சொல்லினாலல்லாமற் கடுஞ் சொல்லினால் எந்நாளும் மகிழ்ச்சியடையார்.
ஏ– அசை

(4) நல்லார் செயுங் கேண்மை நாடோறும் - நன்றாகும்
அல்லார் செயுங் கேண்மை யாகாதே - நல்லாய் கேள்!
காய் முற்றின் தின் தீங்கனியாம் இளந் தளிர் நாள்
போய் முற்றின் என்னாகிப் போம்.

**பதவுரை:-** நல்லாய் கேள் - நற்குணத்தையுடையவளே கேட்பாயாக, காய் முற்றின் தின் தீம் கனி ஆம் - காயானது (நாள் சென்று) முற்றினால் தின்னுதற்குரிய இனிய கனியாகும். இளம் தளிர் நாள் போய் முற்றின் என் ஆகிப் போம் - இளந்தளிரானது நாள் சென்று முற்றினால் யாதாகிப் போம், (அதுபோல) நல்லார் செயும் கேண்மை நாடோறும் நன்று ஆகும் - நல்லோர் செய்யும் நட்பானது நாள்தோறும் நன்றாக வளரும், அல்லார் செயும் கேண்மை ஆகாது - அல்லார் செய்யும் நட்பானது நல்லதாகாது.

"ஔவை அமுதம் எந்நாளும் இனிக்கும்"

## செயற்பாடு

* "ஔவையார் பாடல்கள்" என்னும் நூலை நூல்நிலையத்தில் இருந்து பெற்று அதிலுள்ள பாடல்களைப் படியுங்கள்.

| நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படிக்கவும். | | | |
|---|---|---|---|
| பாடசாலையின் பெயர்:-.................................................... | | | |
| | மாணவர் பெயர் | தரம் | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
| 2010 | ........................................ | .......... | .......... |
| 2011 | ........................................ | .......... | .......... |
| 2012 | ........................................ | .......... | .......... |
| 2013 | ........................................ | .......... | .......... |
| 2014 | ........................................ | .......... | .......... |

හින්දු ධර්මය 5 (දෙමළ) 09FT05 - 02P